தமிழர் பொருணமியம்
வாரமலர்
TAMILS ECONOMY

விலை - 100/=
இதழ் - 79
13.10.2024




# விளாம்பழத்தில் இத்தனை நன்மைகளா?


மன்னர்கள் காலத்தில் குளங்கள் பெற்றிருந்த முக்கியத்துவம் 08

வரி செலுத்த வேண்டியவர்களுக்கு இறைவரித் திணைக்களம் அறிவிப்பு 10

தினை என்றால் என்ன? 14

# யாழ்ப்பாணத்தின் அடையாளமாக.. “றீச்சா” இயற்கைப் பண்ணை!

**குழந்தைகள் றீச்சாவுக்கு வரும்போது, பல விடயங்களையும் அவர்களால் பார்க்கக்கூடியதாக இருப்பதுடன், அவர்களுக்கு மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது. தெரியாத விடயங்களையும் இங்கு அவர்கள் தெரிந்துகொள்ளலாம்.**

பி.பார்த்தீபன்

யாழ்ப்பாணத்தின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக இப்போது மாறிவருகின்றது றீச்சா.

பளைப் பிரதேசச் செயலகத்துக்கு அண்மையில், இயக்கச்சி பகுதியில் 150 ஏக்கர் நிலப்பரப்பில் றீச்சா ReeCha அமைந்திருக்கிறது.

“எமது இந்த றீச்சா பண்ணையின் இயற்கை எழில்மிகு தோற்றங்களையும், சூழலையும் அதனோடிணைந்த பண்ணையின் செயற்பாடுகளையும் அனுபவித்திட உங்களை அழைத்து நிற்பதோடு. சிறுவர்கள் எங்கள் பண்ணையிலுள்ள பன்றிகளைக் கிட்டவே கண்டுகளிக்கவும், கூடவே குதிரையையும் முயலையும் தொட்டுப்பார்க்கவும், கோழிக் குஞ்சுகளைத் துரத்திப்பிடிக்கவும், தென்னங் கன்றுகளினூடாக ஓடி, சந்தனமரச் சோலையில் தனித்திருக்கவும் இயற்கை விளையாட்டு வெளியில் விளையாடி மகிழ்ந்திருக்கவும் உங்களை அழைத்து நிற்கின்றோம்” என்று றீச்சா தன்னைப் பற்றி சொல்கின்றது.

இவை அனைத்தும் உண்மையா என்பதை அறிவதற்காக நேரில் சென்ற போது ஆச்சரியங்கள்தான் காத்திருந்தன. சிறுவர்களுக்கு மட்டுமல்ல அனைத்துத் தரப்பினருக்கும் மகிழ்வளிக்கக்கூடிய பல அம்சங்களை அங்கு பார்க்க முடிந்தது. சில தினங்களுக்கு முன்னர் சுமார் ஆயிரம் புத்தகங்களுடன் நூலகம் ஒன்றும் இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், ஒரு நாள் முழுவதும் இருந்து பொழுதை பயனுள்ள வகையில் செலவிடக்கூடியவாறு பல அம்சங்களுடன் றீச்சா உருவாகியிருக்கின்றது. அதற்கு மேலாக, தங்கியிருப்பதற்கான ஹொட்டல் வசதிகளும் அங்குள்ளது.

இந்தப் பாரிய பண்ணையை ஒவ்வொரு அம்சமாகக் கவனித்து உருவாக்கியிருக்கும் கந்தையா பாஸ்கரனை றீச்சாவில் சந்தித்தோம். தமிழர் பொருண்மியத்துக்காக தமது கருத்துக்களை அவர் பகிர்ந்துகொண்டார்.

கேள்வி - றீச்சாவை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

பதில் - முக்கியமாக வடபகுதியில் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு இவ்வாறான ஒரு முயற்சி அவசியமானதாக இருந்தது. வடபகுதியில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அவசியமானதாக இருந்தது. வேலை வாய்பு இல்லாமையால் பல இளைஞர்கள் பாதை மாறிச் சென்றுகொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு வருமானத்தைக்கொண்டுவரக்கூடிய வகையில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தினால் சமூகத்தில் கணிசமான மாற்றங்களைக் கொண்டுவரமுடியும்.


கந்தையா பாஸ்கரன்

இரண்டாவதாக இலங்கையில் அதிக வருமானத்தை ஈட்டக்கூடிய துறையாக சுற்றுலாத்துறை இருக்கின்றது. ஆனால், வடக்கு கிழக்கில் சுற்றுலாப் பயணிகளின் வருகை விகிதாசார அடிப்படையில் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. இதற்கு அரசியல் காரணங்கள் இருக்கலாம்.

ஆனால், வடக்கு கிழக்கில் காணப்படும் சுற்றுலாத் தளங்கள் அபிவிருத்தி செய்யப்படாமலிருப்பதும் இதற்கு மற்றொரு காரணம். அந்த வகையில் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குச் செல்வதற்கு போதிய இடங்கள் இல்லை.

இங்கு அதிகளவுக்கு சுற்றுலாப் பயணிகளைக் கொண்டுவருவதன் மூலம் பொருளாதாரத்திலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை இருக்கின்றது. காரணம் சுற்றுலாவை மையப்படுத்தி ஏராளமான வியாபரங்கள் நடைபெறுகின்றன. அது போக்குவரத்துக்குரிய வாகனங்களை வைத்திருப்பவர்களாக இருந்தாலும், சிறிய, சிறிய கடைகளை வைத்திருப்பவர்களாக



இருந்தாலும் கணிசமான மக்கள் வடபகுதிக்கு வரும்போது அவர்களுடைய வாழ்க்கையில் மாற்றம் ஏற்படும். அது அவர்களுடைய வாழ்வாதாரத்தில் பெரியளவிலான மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை உள்ளது.

அதனையும் தாண்டி இங்குள்ள பிள்ளைகளுக்கு உள்ளூர் சுற்றுலாத் தளம் என்று ஒன்றில்லை. இங்குள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் வசதியானவர்கள் அல்ல. வடபகுதியைப் பொறுத்தவரையில் அவர்களுக்கான சந்தர்ப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாகத்தான் இருக்கின்றன. இன்று றீச்சாவுக்கு மாதத்துக்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரையிலானவர்கள் வருகின்றார்கள்.

அதில் பெரும்பாலானவர்கள் குழந்தைகள். இந்தக் குழந்தைகள் றீச்சாவுக்கு வரும்போது, பல விடயங்களையும் அவர்களால் பார்க்கக்கூடியதாக இருப்பதுடன், அவர்களுக்கு மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது. தெரியாத விடயங்களையும் இங்கு அவர்கள் தெரிந்துகொள்ளலாம். உதாரணமாக, ஈபிள் ரவர், தாஜ்மகால் போன்றவற்றை குழந்தைகள் அறிந்திருப்பார்கள். ஆனால், அது எப்படியிருக்கும் என்பது அவர்களுக்கு தத்ரூபமாகத் தெரிந்திருக்காது. ஆனால், இங்கு வரும்போது ஒரு மினி தாஜ்மஹாலை அவர்கள் பார்க்கலாம். இது போல குழந்தைகளுக்கு அறிவூட்டக்கூடிய வகையில் பல விடயங்களை உள்ளடக்கியதுதான் இந்த றீச்சா.

றீச்சாவில் ஆடு, மாடு வளர்ப்பதிலிருந்து, ஹோட்டல்களில் ஆட்கள் தங்கியிருப்பதிலிருந்து அவர்களுக்கான உள்ளக விளையாட்டுகள், வெளியக விளையாட்டுகள் என இங்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. அதனால், இங்கு வருபவர்கள் அனைவரும் திருப்திகரமாகத் திரும்பிச் செல்கின்றார்கள்.




இது நாளடைவில், நாட்டின் ஒரு அடையாளமாக்க வேண்டும் என்பதற்காக ஏராளமானவர்கள் இங்கு பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள்.




அதனால், இன்னும் இரண்டு, மூன்று வருடங்களில் இது வடபகுதிக்கு மட்டுமன்றி, முழு இலங்கைக்கும் பெருமை சேர்க்கும் ஒரு தளமாக மாற்றமடையும் என்று நிச்சயமாக நம்பலாம்.

கேள்வி - புலம்பெயர்ந்த மக்கள் தாயகத்துக்கு வரும் போது விரும்பிவரும் ஒரு இடமாக இது அமைந்திருக்கின்றதா?

பதில் - நானும் புலம்பெயர்ந்த ஒருவன் - என்பதுடன் பல முயற்சிகளில் ஈடுபட்டவன் என்ற முறையில் என்னுடைய பெயர் அந்த மக்களுக்கு நன்கு பரீட்சயமான ஒன்று. நான் இவ்வாறான ஒரு முயற்சியை முன்னெடுப்பதை அவர்கள் பெருமையாகப் பார்க்கின்றார்கள். அதனால், புலம்பெயர்ந்த மக்கள், இங்கு வரும்போது நிச்சயமாக றீச்சாவுக்கு வந்து செல்கின்றார்கள். இது ஒரு மகிழ்ச்சியான விடயம். இந்த ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் ஐரோப்பிய நாடுகளில் விடுமுறையாக இருப்பதால் அந்தக் காலங்களில் புலம்பெயர்ந்த மக்களை அதிகளவுக்கு இங்கு வருவதைக் காணக்கூடியதாக இருந்தது.

கேள்வி - தென்னிலங்கையிலிருந்து சிங்கள, முஸ்லிம் மக்கள் அதிகளவுக்கு ஆர்வமாக வருகின் றார்களா?

பதில் - சிங்கள மக்களுடைய வருகை ஆரம்பத்தில் குறைவாகத்தான் இருந்தது. சிங்களப் பகுதிகளில் இதற்கான சந்தைப்படுத்தலை போதிளவுக்கு முன்னெடுக்கவில்லை. காரணம் ஏராளமான வேலைத் திட்டங்கள் றீச்சாவுக்குள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வார இறுதி நாட்களில் அதிகளவானவர்கள் வருகின்றார்கள். அவர்களுக்குத் தேவையான வசதிகளைத் திருப்திகரமாகச் செய்ய வேண்டும் என்பதில்தான் அக்கறை காட்டுகிறோம். அதனால், போதியளவுக்கு சிங்கள மக்கள் மத்தியில் சந்தைப்படுத்தலை முன்னெடுக்கவில்லை. ஆனால், இங்கு வந்து சென்ற மக்கள் சொன்னவைகளைக் கேட்டு இப்போது கணிசமானளவு சிங்கள மக்களும் இங்கு வரத் தொடங்கியுள்ளார்கள்.

அதனைவிட பெருமளவு முஸ்லிம் மக்கள் இங்கு வருகின்றார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இரண்டு விடயங்கள் முக்கியமாகச் சுட்டிக்காட்டப்பட்டது. அவர்களுடைய தொழுகைக்காக இரண்டு இடங்கள் இப்போது அமைத்திருக்கின்றோம். ஆண்களுக்குத் தனியாகவும், பெண்களுக்குத் தனியாகவும் அவை அமைக்கப்பட்டுள்ளன.

அதேபோல அவர்களுடைய உணவுப் பழக்கத்துக்கேற்ற வகையில், ஹலால் உணவை வழங்கக்கூடியதாக நெய்தல் என்ற பெயரில் ஹலால் உணவகம் ஒன்றையும் அமைத்திருக்கின்றோம். வடபகுதியில் இவ்வாறான ஹலால் உணவகம் என்றால் இதுதான் மிகப்பெரியது. இஸ்லாமிய சகோரர்களை சமையற்காரர்களாகக் கொண்டுதான் இது அமைக்கப்பட்டிருக்கின்றது. இங்கு 300 வரையிலான இருக்கைகள் உள்ளன. வடக்கு, கிழக்கில் மிகப்பெரிய உணவகமாக இதுதான் இருக்கின்றது.

கேள்வி - சுற்றுலாத் தளம், பொழுது போக்கு மையம் என்பதையும் தாண்டி உணவு உற்பத்தியிலும் நீங்கள் ஈடுபட்டுள்ளீர்கள். அது குறித்து சொல்ல முடியுமா?

பதில் - இந்த றீச்சா பண்மை அமைந்திருக்கும் இடம் உவர் நிலம். அதாவது, கடற்கரையை அண்டி ஒரு இடம். இதிலிருந்து சுமார் ஆறு, ஏழு கிலோ மீட்டர் தொலைவில் கடல் உள்ளது. அதாவது, இது விவசாயம் செய்வதற்கு கடினமான ஒரு இடம். இது தென்னை மரத்துக்கும், கஜூ மரத்துக்கும்தான் உகந்த ஒரு இடம்.

ஆனால், விடா முயற்சி, விஸ்வரூப வெற்றி என்பதற்கு அமைய இம் மண்ணின் தன்மையை மாற்றி இதில் விவசாயத்தையும் நாங்கள் முன்னெடுக்கின்றோம்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777304010 / 0702675575

# வடக்குக்கான ரயில்?

இலங்கையின் ரயில்வே போக்குவரத்தைப் பொறுத்தவரையில் காங்கேசன்துறை, கொழும்பு போக்குவரத்து மிகவும் முக்கியமானது. இலங்கையில், அதிக நீளமான ரயில்வே பாதையாக மட்டுமன்றி, ரயில்வே திணைக்களத்துக்கு அதிக வருமானத்தை ஈட்டித்தரும் பாதையாகவும் இதுதான் உள்ளது. ஆனால், கடந்த சுமார் ஒரு வருடகாலமாக இந்தப் பாதையில் ரயில் ஓடவில்லை. திருத்த வேலைகளால், அது இடைநிறுத்தப்பட்டிருந்தது. இப்போது மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னாம்கூட, அதில் சில தடங்கல்கள் இருப்பது தெரிகின்றது.

மணிக்கு நூறு கிலோமீற்றர் வேகத்தில் இயங்கும் நோக்கில் நவீனமயமாக்கப்பட்ட வடக்கு ரயில்வேயின் மஹவ முதல் அநுராதபுரம் வரையிலான பகுதி முழுமையடையாத காரணத்தால், அந்தப் பகுதி ரயில்களின் வேகம் மணிக்கு நாற்பது கிலோமீட்டருக்கும் குறைவாக இயக்குவதற்கு இப்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புகையிரத பொது முகாமையாளர் எஸ்.எஸ்.முதலி மற்றும் புகையிரத சாரதிகள், கட்டுப்பாட்டாளர்கள், நிலைய அதிபர்கள் உள்ளிட்ட புகையிரத தொழிற்சங்க பிரதிநிதிகள் தலைமையில் புகையிரத தலைமையகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த ரயில் பாதையை எதிர்வரும் 22ம் திகதி திறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேவேளையில், முழுமையடையாத பகுதிகளின் பழுதுகளை சரி செய்ய ஆறு மாதங்களுக்கு குறைந்தபட்ச வேகத்தில் ரயிலை இயக்கவும் பொது மேலாளர் அறிவுறுத்தினார். இதன் காரணமாக 64 கிலோமீற்றர் தூரத்தை ஒரு மணித்தியாலத்தில் கடக்கும் முயற்சி இரண்டரை மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

3000 கோடி ரூபா செலவில் மஹவ முதல் அனுராதபுரம் வரையான பகுதியின் நிர்மாணப்பணிகள் இந்திய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன், எனினும் ஏற்பட்ட தாமதம் காரணமாக அந்த நிறுவனத்திடம் இருந்து புகையிரதப் பாதையை ரயில்வே திணைக்களம் உத்தியோகபூர்வமாக கையகப்படுத்தியுள்ளது.

வடபகுதி மக்களைப் பொறுத்தவரையில் பாதுகாப்பானதும், இலகுவானதும், செலவு குறைந்ததுமான பயணத்துக்கு ரயிலைத்தான் அவர்கள் நம்பியுள்ளார்கள். சாதாரண தினங்களிலேயே தினசரி நூற்றுக்கணக்கானவர்கள் யாழ் – கொழும்பு பயணத்தை மேற்கொள்கின்றார்கள். விசேட தினங்களில் இது அதிகமானதாக இருக்கும். அதனால், முன்னுரிமை கொடுத்து செயற்படுத்த வேண்டிய திட்டங்களில் ஒன்றாக இது இருக்கின்றது.

பொருளாதார வளர்ச்சிக்கு இலகுவானதும்– விரைவானதுமான போக்குவரத்து வசதி அவசியம். அந்த வகையில் இந்த ரயில் சேவை முக்கியம் பெறுகின்றது. பஸ்ஸில் பயணம் செய்ய முடியாது என்பதற்காக அந்தப் பயணத்தை தவிர்ப்பவர்கள் பலர் இருக்கின்றார்கள். அதனால், முழுமையாக விரைவான பயணத்துக்கு ஏற்றவகையில் இந்தப்பாதையை திருத்தியமைப்பதற்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுக்க வேண்டும்!

# விளாம்பழத்தில் இத்தனை நன்மைகளா?

**குழந்தைகளுக்கு இந்த பழத்தை தருவதால், அவர்களது நினைவாற்றல் அதிகரிக்க செய்யும்.. நரம்பு தளர்ச்சி இருந்தால், இந்த பழத்தை வெல்லத்துடன் கலந்து சாப்பிடலாம்.. நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும் விளாம் மரத்தின் பிசினை அடிக்கடி சாப்பிட்டு வர, பெண்களுக்கு ஏற்படும் ரத்தப்போக்கு, வெள்ளைப்படுதல் போன்ற பிரச்சினைகள் தீரும்..**

க.அமுதன்

விளாமரம் என்று அழைக்கப்படும் மரத்தின் பழங்கள் பலராலும் விரும்பி உண்ணப்பட்டாலும். யாரும் ஆர்வமாக நட்டு வளர்க்க முன்வராத காரணத்தாலேயே இது அரிய வகை மரமாக மாறிவிட்டது. விளாமரங்களை வணிக ரீதியில் வளர்த்தால் நல்ல லாபம் பெறலாம். அத்தகைய ஆதாயம் நிறைந்த விளாமரம் பற்றிய சில தகவல்கள் இதோ:

விளா மரத்தின் தாவர அறிவியல் பெயர் பெரோனியா எலிஃபெண்டம் (Feronia Elephantum). ஆங்கிலத்தில் Wood Apple என்பார்கள். இதன் தாயகம் இந்தியா. பிறகு பாகிஸ்தான், இலங்கை, தைவான், மியான்மர் ஆகிய நாடுகளிலும் விளைவிக்கப்பட்டது. இம்மரம் காடுகளில் அதிகம் காணப்படும். தோட்டங்களிலும், கோயில்களிலும் வளர்க்கப்படுகிறது.

காயாக இருக்கும்போது அதன் சதை துவர்க்கும். பழுத்தால் துவர்ப்பும், புளிப்பும் கலந்த புது சுவையாகும். விளா ஓடுகளை, கைவினைப் பொருள்கள் செய்யவும் பயன்படுத்துகிறார்கள்.

**விளாம்பழத்தின் மருத்துவ குணங்கள்:**

* தசை வளர்ச்சி, உடல்வளர்ச்சிக்கான சத்துள்ள பழம். ரத்தத்தை விருத்தி படுத்துவதோடு, சுத்திகரிப்பும் செய்கிறது.

* விளாம்பழத்தில் “வைட்டமின் பி2’ மற்றும் “வைட்டமின் ஏ’, சுண்ணாம்புச்சத்து (கால்சியம்) அதிகமாக இருப்பதால் பல், எலும்புகளை வலுவடையச் செய்கிறது.

* விளாம்பழ மரத்தின் பிசினைத் தொடர்ந்து சாப்பிட்டுவர, பெண்களுக்கு ஏற்படும் அதிக ரத்தப்போக்கு, வெள்ளைப்படுதல் போன்ற பிரச்னைகள் குணமாகும்.

* தயிருடன் விளாங் காயைப் பச்சடி போல் செய்து சாப்பிட்டால் வாய்ப்புண், குடல்புண் (அல்சர்) குணமாகும்.

* வெல்லத்துடன் விளாம்பழச் சதையைப் பிசறி சாப்பிட்டு வர நரம்புத் தளர்ச்சி விரைவில் நிவர்த்தியாகும்.

* விளாம்பழத்துடன் பனங்கற்கண்டைக் கலந்து சாப்பிட, பித்தக் கோளாறுகளால் ஏற்படும் வாந்தி, தலைச் சுற்றல் நீங்கும்.

* தினமும் குழந்தைகளுக்கு விளாம்பழத்தைக் கொடுத்து வர நினைவாற்றல் அதிகரிக்கும்.

* விளா மர இலையைத் தண்ணீரில் போட்டு, கொதிக்க வைத்துக் குடிக்க வாயுத் தொல்லை நீங்கும்.

* விளாங்காயை அரைத்து மோரில் கலந்து குடிக்க. நாள்பட்ட பேதி சரியாகும்.

* விளா மரப்பட்டையைப் பொடித்து தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைக்கவும். இந்தக் கசாயத்தை வடிகட்டிக் குடிக்க வறட்டு இருமல், மூச்சு இரைப்பு,



தெடர்ச்சி 17ம் பக்கம்....



# தங்க நகை விலை

**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,98,300 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,16,300 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** இந்தியாவின் பிரபல தொழிலதிபர் ரத்தன் டாடாவின் மறைவு அந்த நாட்டையே கலங்க செய்துள்ளது என்பதை செய்திகளைப் பார்க்கும் போது அறியமுடிகின்றது. எந்தவகையில் அவர் ஒரு முன்னுதாரணம்?

**பதில் -** உண்மைதான். பல விடயங்களில் அவர் முன்னுதாரணமாக இருந்துள்ளார்.

ரத்தன் டாடா 1962-ல் டாடா குழுமத்தில் இணைந்தார். 1971-ல் கடும் நிதி நெருக்கடியில் சிக்கியிருந்த தி நேஷனல் ரேடியோ அண்ட் எலக்ட்ரானிக்ஸ் கம்பெனி நிறுவனத்தின் (Nelco) பொறுப்பு இயக்குநராக பொறுப்பேற்றார். இவரது ஆலோசனைகளால் நெல்கோ மீண்டது. 1991-ம் ஆண்டு ஜே.ஆர்.டி.டாடாவிடம் இருந்து டாடா குழுமத் தலைவர் பொறுப்பை ஏற்றார். பல புதிய திட்டங்களைப் புகுத்தி நிறுவனத்தின் வருமானத்தை 10 மடங்கு உயர்த்தினார். கோரஸ், ஜாகுவார், லேண்ட் ரோவர் ஆகிய வெளிநாட்டு நிறுவனங்களை டாடா குழுமம் வாங்கியது.

பங்குச் சந்தையில் மிக அதிக சந்தை முதலீடு கொண்டதாக டாடா குழுமம் திகழ்கிறது. இவரது வழிகாட்டுதலில் டாடா கன்சல்டன்சி சர்வீஸ் பொது நிறுவனமானது. நியூயார்க் பங்குச் சந்தையிலும் பட்டியலிடப்பட்டது.

நடுத்தரக் குடும்பத்தினர் ஒரு மோட்டார் சைக்கிளில் 4 பேராக கஷ்டப்பட்டுப் போவதைப்பார்க்கும்போதெல்லாம், குறைந்த விலையில் சிறிய கார் தயாரிக்க வேண்டும் என்ற உந்துதல் இவரிடம் ஏற்பட்டது. இந்த கனவு, 'டாடா இண்டிகா' வடிவில் 1998-ல் நிஜமானது. உலகிலேயே மலிவாக கார் வெளியிடுவதாக அறிவித்தார். 'டாடா நானோ' கார் 2008-ல் உற்பத்தியாகி வந்தபோது அதன் செலவு அதிகரித்துவிட்டது. ஆனாலும், விலையை உயர்த்த மறுத்துவிட்டார்.

இந்தியாவின் மோட்டார் வாகனத் தொழில் துறையில் மாபெரும் மாற்றம் ஏற்படுத்திய தொழிலதிபர் இவர். இந்தியப் பிரதமரின் வணிகம் மற்றும் தொழில்கள் தொடர்பான குழுவில் உறுப்பினராக இருந்தவர். பல்வேறு வெளிநாட்டு அறக்கட்டளைகளுக்கு அறங்காவலர் குழு உறுப்பினராக இருந்தவர். பில்கேட்ஸ் நிறுவனத்தின் இந்திய எய்ட்ஸ் திட்டக் குழுவிலும் இருந்தவர்.

பத்மபூஷண், பத்மவிபூஷன், நற்பணிகளுக்கான கார்னகி பதக்கம், சிங்கப்பூர் அரசு வழங்கிய கவுரவக் குடிமகன் அந்தஸ்து, பிரிட்டிஷ் அரசின் ஹானரரி நைட் கமாண்டர் ஆஃப் பிரிட்டிஷ் எம்பயர் ஆகிய கவுரவங்களைப் பெற்றுள்ளார். டைம் இதழ் வெளியிட்ட உலகின் செல்வாக்கு படைத்த 100 பேர் பட்டியல் மற்றும் உலகின் சக்திவாய்ந்த நபர்கள் பட்டியலில் இடம்பெற்றவர்.

2012 வரை டாடா குழுமத் தலைவராக இருந்த இவர் டாடா குழும அறக்கட்டளைகளின் தலைவராக இருந்து வழிநடத்தியவர். 'ரிஸ்க் எடுக்காமல் இருப்பதுதான் பெரிய ரிஸ்க்' என தனது சக்சஸ் மந்திரம் குறித்து அவர் சொல்வார். அதை அவர் வாழ்வின் இறுதிவரை தொடர்ந்தார். அவரது வெற்றிகளுக்கும் அதுதான் காரணம்!

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94 777 304010**



# வடக்கின் சந்தை நிலைவரம்

| | |
|---|---|
| கத்தரிக்காய் | 220/= |
| உருளைக்கிழங்கு | 240/= |
| பச்சை மிளகாய் | 250/= |
| தக்காளி | 240/= |
| மரவள்ளிக்கிழங்கு | 220/= |
| கோவா | 200/= |
| கரட் | 200/= |
| வாழைக்காய் | 200/= |
| சின்ன வெங்காயம் | 220/= |
| பாகற்காய் | 300/= |
| வெண்டிக்காய் | 120/= |
| பயற்றங்காய் | 160/= |
| பீற்றூட் | 100/= |
| முருங்கைக்காய் | 340/= |
| தேங்காய் | 150/= |



# நாணய மாற்று வீதம்

**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 192/= |
| கனடா டொலர் - | 209/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 314/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர்டொலர் - | 219/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 376/= |
| சுவிஸ் பிராங் - | 333/= |
| அமெரிக்க டொலர் - | 288/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 202/= |
| கனடா டொலர் - | 218/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 327/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 229/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 390/= |
| சுவிஸ் பிராங் - | 348/= |
| அமெரிக்க டொலர் - | 297/= |

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

**போன கிழமை நடந்த ஒரு நிகழ்ச்சி ஒண்டுக்கு வீட்டம்மாவோட போனனான். இனி வீட்டம்மாவோட சபைசந்திக்கு போகேக்கை கொஞ்சம் கவனமா உடுத்துப்படுத்துப் போகவேணும். இல்லாட்டில் ஆக்கள் தன்னை மதிக்காயினம் எண்டு என்னைப்பேசுவா.**

அதால நானும் முந்தி ஆச்சி அடிப்பிடிச்ச சோத்துப்பானையை கிணத்தடியில இருந்து பழப்புளி போட்டு மினக்கெட்டு மினுக்கினமாதிரி வெளிக்கிட எண்டு மினக்கெடுவன். வீட்டம்மாவும் சொல்லிறது சரிதான் சபை சந்திக்குப் போகேக்கை கொஞ்சம் சங்கையாத்தான் போகவேணும் அப்பதான் ஆக்கள் கணக்கெடுப்பினம் எண்டுவா எங்கட ஆச்சி.

அங்கை போனா நிறைய ஆக்கள் குறிப்பாப் பெண்டுகள் இருந்தவை. என்னமோ குசுகுசுத்துக் கொண்டு இருந்தவை. அவைக்கு அங்க நடக்கிற வைபவத்தில என்ன நடக்குது எண்டு பாப்பம் எண்ட சிந்தனை இருந்த மாதிரித் தெரியேல்லை. என்னவும் முதல் நாள் பாத்த சீரியல்லை புருசனை வீட்டால துரத்திப் போட்டு கண்ணீர் வராம விக்கி விக்கி அழுத நடிகையின்ரை சாறியைப் பற்றித்தான் குசுகுசுத்திருப்பினம்.

அரிசி விலை கூடினதை விடக்கனபேருக்கு சாறி விலை கூடினது சரியான கவலை. அத மாதிரி அரிசி விலை தெரியாதவன்தான் அரசியல் பேசுவான். அவனுக்குத்தான் அதுக்கு நேரம் இருக்கும் எண்டுவார் எங்கட அப்பு.


நான் அங்க போனதும் இடைக்கிடை கவிதை கட்டுரை எழுதிறதால அங்கினைக்கை இங்கினைக்கை படிச்சதால வேலை செய்ததால ஆக்களுக்கு என்னைத்தெரியுமாக்கும் எண்டு பெரிய கெப்பரில இருந்தன். ஆனா அங்க இருந்தவைக்கு என்னைத் தெரியேல்லை. அங்கை இருந்த ஒரு அன்ரியிட்டைக் உவர் ஆர் ஒருத்தர் சேவ் எடுத்த பனை மாதிரி இருக்கிறார் எண்டு கேட்டிச்சினம்.

அவை அப்பிடிக்கேட்டஅம்மணி உண்மையில ஒரு ஆச்சி. வெள்ளவத்தை மாக்கற்றில வாடின கத்தரிக்காய்க்கு தண்ணி ஊத்தின மாதிரி ஒரு மேக்கப் போட்டிருந்தவ. அன்ரியெண்டு சொல்லாம ஆச்சியெண்டு சொன்னா உடன தன்ரை வீட்டய்யாவைப் பேசுற மாதிரியே இங்கிலீசில திட்டுவா. அதால அவவை அன்ரியெண்டே வைச்சுக்கொள்ளுவம்.

இப்ப கனபேருக்கு உது ஒரு வியாதி மாதிரி. மாமா, மாமி எண்டு சொல்லிறதை விட அங்கிள் அன்ரி எண்டு சொல்லுறதுதான் விருப்பம், அத மாதிரி வயது போன கனபேரை அப்பு ஆச்சி எண்டு சொன்னால் கோவம் வரும். அவையையும் அன்ரி அங்கிள் எண்டுதான் கூப்பிட வேணும்.

உடனை அவ அன்ரி இவரைத் தெரியாதே இவர்தான் சித்திராவின்ரை ஹஸ்பெண்ட் எண்டு சொல்லவும் அங்கை இருந்தவை. ஓ...ஐசீ. .நாங்க றைவர் எண்டு நினைச்சம் எண்டு போட்டு தங்கட டிஸ்க்கசனைத் தொடர்ந்திச்சினம்.

உடனை வீட்டம்மா என்னை ஒரு தினுசாப்பாத்தா. என்ன அப்பிடிப்பாக்கிறாய் எண்டவும். நீங்களும் உங்கடை கவிதை மாதிரி எண்டா. எனக்கெண்டாச் சரியான புழுகமாப்போச்சு. சீ...சீ...ஆக்களுக்கை என்னைப்புழுகாதை எண்டன். உடனை அவ இல்லை ரெண்டையும் ஒருத்தரும் கணக்கெடுக்கிறேல்லை எண்டா.... அப்ப ...பாருங்கோவன்.....



# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும்போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.

இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1.வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.

2.சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.

3.கூடுதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.

4.ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.

5.நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும், அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1.பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

2.இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.

3.அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.

4.திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுவனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

5.கண்காணிப்பு குழுவினரால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்

உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94 777 30 4010 / +94 702 67 5575**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

**அக்காலத்தில் வவுனிக்குளத்தின் ஒவ்வொரு வீட்டிலும் இருசில்லு உழவு யந்திரமோ, அல்லது பெரிய உழவு யந்திரமோ, வாங்கினார்கள். செத்தல் மிளகாய் வெங்காயம் உழுந்து பயறு என்பன பார ஊர்திகளில் கொழும்புக்கு சென்றது. கத்தரி மிளகாய் பூசனி பாகல், போன்ற பலதரப்பட்ட மரக்கறிகள் அதிகாலை வவுனியா செல்லும் வாகனங்களில் பயணித்தன**

# குளங்களை மையப்படுத்திய குடியேற்றமும் பொருளாதாரமும்

**பார்வை 9**



தமிழ்க்கவி



சேர சோழ பாண்டிய மன்னர் காலத்திலும் சரி ஏனைய தமிழ் மன்னர்கள் காலத்திலும் சரி அவர்கள் கோவில்களையும் கோட்டைகளையும், மதங்களை வைத்து மக்களை துண்டாடியதுமான வரலாற்றையே கொண்டுள்ளனர். ஒரு சில விரல் விட்டு எண்ணக்கூடிய அணைக்கட்டுகள் பெரும் நதிகளை மறித்து போடப்பட்டதையும் ஒரு சோழன் செய்திருக்கிறான். ஆக சிங்கள மன்னர்களை நாம் அவர்களோடு ஒப்பிட்டு பார்த்தால் அவர்கள் விகாரைகளை கட்டிய அதே வேளை முக்கியமான பல குளங்களை கட்டி விவசாயத்தை பெருக்கியுள்ளனர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஏ.ஜே. லூயிஸ் எழுதிய வன்னி மாவட்டங்கள் பற்றிய நூலில் காடுகளில் கைவிடப்பட்டிருந்த ஏராளமான குளங்களில் ஈடிபாடுகளில் சிங்களவர்களின் காடுகளாக இருக்கலாம் என குறித்துள்ளார். குளங்களுக்கு சுலுசு அமைக்கும் முறை தெரியாத மக்கள் குளக்கட்டின் கீழ் துளை போட்டு மரக் கொட்டுகளை வைத்தே நீர்ப்பாசனம் செய்தார்கள். மரம் இற்றுப் போகும் போது தானாகவே அது மூடுண்டு பொகும் மீண்டும் ஒரு துளையை உருவாக்கி அதன்மூலம் நீர் பாச்சபட்படும். இது கண்மாய் எனப்பட்டது.

வவுனிக்குளம்வடபகுதியில்முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு பெரிய குளமாகும். இது எல்லாளன் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது. இதன் கலிங்கல் அமைப்பும், ஈற்றப்பெரிய குளத்தின் கலிங்கல் அமைப்பும் ஒத்திருக்கிறது. பாரிய பாறைக்கற் பொழிவுகள் அடுக்கப்பட்டு ஒருவகை சுதை பூசப்பட்டுள்ளது. பாலியாற்றை மறித்து உருவான இந்தக்குளம் படித்த வாலிபர் குடியேற்றத்திட்டத்தில் பெரும் பங்கு வகிக்கிறது. குளத்து நீர்ப்பாசனம் தோட்டச் செய்கைக்காக குறிப்பாக செத்தல் மிளகாய் உற்பத்திக்காக வழங்கப்பட்டது.

முதன் முதலில் கையால் தள்ளிச் செல்லும் உழவு யந்திரமும் அதனாலேயே களை எடுக்கும் வண்ணம் நீண்ட அகன்ற வரிசையில் கன்றுகள் நடும் முறையும் அப்போது அறிமுகமானாலும், குழிக்கன்று வைத்து அதை ஒரு மாதம் வரையில் கைகளால் நீரூற்றி வளர்க்கும் யாழ்ப்பாண சிறு தோட்டச் செய்கை போலவே, நிறைந்த தொழிலாளர்களை ஈடுபடுத்தி செய்யப்பட்டது. இந்த தோட்டக் காணிகளுடன் கூடவே நெற் செய்கைக்கான காணிகளும்வழங்கப்பட்டன. பாண்டியன்குளம், கரும்புள்ளியான், சின்ன பூவரசன்குளம், கொத்தம்பியாகுளம்,



ஒட்டங்குளம், பனங்காமம், நட்டாங்கண்டல், மல்லாவிக்குளம், அனிஞ்சயன் குளம், தேறாங்கண்டல், ஆலங்குளம், உயிலங்குளம் வழியாக, தெணியன் குளம்வரை இந்தக் குளத்தின் நீர்ப்பாசனம் விரிகிறது.

இதைவிட முறையற்றதான மானாவாரி (மழையை நம்பி பயிர் செய்யும் நிலம்) காணிகளும் பயனடைகின்றன. மல்லாவி கிராமத்தை ஊடறுத்து பாயும் பாலியாறு, பனங்காமம், துணுக்காய் வீதியில் துணுக்காயிலிருந்து இரண்டாவது கிலோமீட்டரில் பாலத்தடியில் அழகிய பாலியம்மனாக வழிபாடு செய்யும் ஆற்றங்கரையையும், கோவிலையும், பெரிய பாலத்தையும் கொண்டமைகிறது. இங்கு பிதிர்க்கடன் செய்யும் இடமாகவும் இவ்விடம் தெரிகிறது. நேர்வழிகளை தவிர்த்து, பள்ளங்களைத் தேடி ஓடி, வெள்ளாங்குளத்தை இது கடக்கும். அந்த இடத்தில் குடிநீர்த் திட்டத்திற்காக ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைய உள்ளது.

வவுனிக் குளத்தில் நிலங்களை கொடுக்கும்போதே ஒவ்வொரு பிரதேச மக்களையும் ஒவ்வொரு குழுக்களாகவே குடியேற்றினார்கள். அந்த மக்களுக்கு தேவையான அடிப்படைவசதிகளாக போக்குவரத்து, வைத்தியசாலை, பாடசாலை, காவல்துறை, கமநலசேவைநிலையம்என்று உருவாக்கியவை மிகவும்உயர்ந்த நிலையில் பேணப்பட்டன. இப்பகுதி மக்களுக்கு போதிய மேய்ச்சற்றரவைகள் இருந்தமையால் பெருமளவு கால்நடைகளை வளர்த்தனர். சில பட்டிகளில் நூற்றுக்கணக்கான மாடுகள் நின்றன. அண்மையில் ஒரு பொருளாதார இதழில் குறிப்பிட்டது போல தனது கால்நடைகள் எத்தனை என்று இனம் தெரியாத எண்ணிக்கை தெரியாத கமக்காரர்களும் இருக்கவே செய்தார்கள்.

இவ்வாறு அறுபதுகளின் கடைசியில் நிரந்தரமாக குடியேறாமல், குடியேற்றத்திட்ட வீடுகளுடன் தோட்டச்செய்கையில் ஈடுபட்டவர்கள் பிள்ளைகளின் கல்வியையே கவனமாக கவனித்தனர். விளைவு உயர் வகுப்புகளை எட்டியபோது அவர்கள் யாழ்ப்பாணத்தின் தரமான பாடசாலைகளில் படித்தனர். படிக்கிற பிள்ளைகளை தோட்டத்தில் இறங்க பெற்றார் அனுமதிக்கவில்லை. முன்னர் தனிப்பாடல் திரட்டில் ஒரு செய்யுள் வரும் தந்தையைப்பற்றி மகன் பாடுவது.

> “அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னும் ஆதரவாய் ஆடைகளும் – கொள்ளிக்கும் பட்டகடனுக்கும் குறித்து வளர்த்ததல்லால் பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே.”

என்று இன்றைய தந்தைகளில் ஏராளமானவர்களுக்கு கொள்ளி போடவேண்டிய பிள்ளை அருகிலில்லை. படிக்கவைத்து அவர்களை தூரதேசங்களுக்கு அனுப்பிவிட்டு தோட்ட நிலங்களில் வான்பயிர்களை உருவாக்கிவிட்டு மாட்டுப்பட்டிகளுடன் காலம் தள்ளும் பெரியவர்களைக் காண்கிறோம். உற்பத்திகளின் முடிவு, அல்லது குறைவு திட்டமிடப்பட்டு பலியாக்கப்பட்டுள்ளது.

அக்காலத்தில் வவுனிக்குளத்தின் ஒவ்வொரு வீட்டிலும் இருசில்லு உழவு யந்திரமோ, அல்லது பெரிய உழவு யந்திரமோ, வாங்கினார்கள். செத்தல் மிளகாய் வெங்காயம் உழுந்து பயறு என்பன பார ஊர்திகளில் கொழும்புக்கு சென்றது. கத்தரி மிளகாய் பூசனி பாகல், போன்ற பலதரப்பட்ட மரக்கறிகள் அதிகாலை வவுனியா செல்லும் வாகனங்களில் பயணித்தன. இன்று மிக அரிதாக இவற்றைப்பார்க்கிறோம் எம்மிடம் போதிய பணமிருந்தாலே போதும்நாம்விரும்பியதை சாப்பிட்டு விரும்பியபடி ஆடை அணிந்து, மீதமுள்ள பணத்தில் கோவில்களையும் உருவாக்கி சின்ன விழாக்களையும் டாம்பீகமாக கொண்டாடி மகிழ்கிறோம்.



ஏராளமான புதிய கமக்காரர்கள் கடைக்காரர்கள் தொழிலாளர்கள் மல்லாவிப் பிரதேசத்தில் குடியேறியுள்ளனர். விவசாயச் செய்கையிலும்ஈடுபடுகின்றனர். புதிதாக வீட்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். வவுனினிக் குளத்தின் கட்டில் மூன்று சுலுசுகள் பூட்டப்பட்டுள்ளன. மேற்கையிலுள்ள காணிகளுக்கான நீர்ப்பாசனமும் நடைபெறுகிறது. எனினும் இந்தக்குளம் ஒரு போதும் வற்றியதில்லை.

யாராவது மாங்குளத்திலிருந்து மேற்கே செல்லும் துணுக்காய் வீதியில் பயணித்து நான்காவது மைல் கல்லிலிருந்து தெற்கே திரும்பும் வீதியில் அடர்டவனத்தில் இறங்கிப்பயணம் செய்தீர்களானால் அருமையான அனுபவம் ஏற்படும். மனதைக் கொள்ளைகொள்ளும் அந்த இயற்கையை ரசித்தவாறே ஒன்பதாவது மைலில்அழகிய பாலத்தின் மீது நின்று பாலியாற்றின் அழகை ரசித்திருக்கிறீர்களா? மலையிலிருந்து பார்ப்பது போல அவ்வளவு அழகு ச்சைக பேரழகு கொட்டிக்கிடக்கும் அந்த ஆறுதான் மல்லாவி வவுனிக்குளத்தை நிரப்பி பின்புறமாக, ஒட்டங்குளம் கல்விளான், வெள்ளாங்குளம் கடந்து கடலில் கலக்கிறது.

வெள்ளாங்குளம் கடந்து பெருமளவு காடுகளை உள்நிறுத்தியாழ்ப்பாணத்துக்கான குடிநீர் விநியோகத்திற்காக இது தடுக்கப்படப் போகிறது. அண்மையில் இதற்காள அடிக்கல்லை நாட்டியுள்ளதாக கேள்வி. இவ்வளவு வளம் எமது மண்ணில் கொட்டிக்கிடக்கிறது. இதுவரை காலமும் யுத்தத்திற்கு முன்னுரிமை கொடுத்து எந்த அபிவிருத்தி வேலைகளையும் செய்ய யாராலும் முடியவில்லை. இனியும் செய்வதற்கு எமது இளைஞர்களிடம் தென்பில்லை. நாம் நமது நாடு என்பது மறந்து போய் விட்டது. அவர்கள் வேறு நாடுகளை நாடுகிறார்கள்.

# வரி செலுத்த வேண்டியவர்களுக்கு இறைவரித் திணைக்களம் அறிவிப்பு




2023-2024 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரியை செலுத்தி முடிப்பதற்கான அவகாசம் கடந்த மாதம் செப்டம்பர் 30ம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. இதனை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (ஐசுனு) ஏற்கனவே வரி செலுத்துவோர்க்கும் புதிதாக வரியை செலுத்த வேண்டியவர்களுக்கும் கடுமையாக அறியத்தந்துள்ளது.

இந்த கால அவகாசத்தைப் பயன்படுத்தி அனைத்து வரிகளையும் செலுத்தத்தவறுவோர் எதிர்கொள்ளும் சட்ட நடவடிக்கைகள் குறித்து திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தொடர்பான அறிவிப்பின்படி, 2024 அக்டோபர் 30ம் திகதிக்குள் நிலுவையில் உள்ள வரிகளை செலுத்துவதற்கான இறுதி வாய்ப்பாக அவகாசம் வழங்கப்பட்டது.

இந்த நேரக்கெடு முடிவடைந்தவுடன், வரி செலுத்துவதைத் தவிர்த்த நபர்கள் சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கைகளை எதிர்நோக்க வேண்டும் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD) தெரிவித்துள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் இருந்து எதிர்பார்த்த வரி வருமானம் கிடைக்காமையால் அரச வருமானம் நெருக்கடியாக மாறும் அபாயம் காணப்படுவதாக நிதி அமைச்சின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வருடத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்க மற்றும் மதுவரி திணைக்களம் ஈட்ட வேண்டிய மொத்த வருமான இலக்கு 4,127 பில்லியன் ரூபாவாகும். அந்தத் தொகையிலிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஈட்ட வேண்டிய வருவாய் இலக்கு 2,024 பில்லியன் ரூபாவாகும். இதன்படி, இவ்வருடம் ஜனவரி முதல் செப்டெம்பர் வரையான 9 மாதங்களில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஈட்ட வேண்டிய இலக்கு வருமானம் 1,518 பில்லியன் ரூபாவாகும். எனினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அரசாங்கத்தின் நிதித் திணைக்களங்களுக்கு வழங்கிய ஆவணங்களில், முதல் ஒன்பது மாதங்களுக்கு 1,498 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்ட முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

### நிலுவையில் உள்ள வரிகள்

விதிகளின் அடிப்படையில், வரி செலுத்தாமை அல்லது தாமதம் ஏற்படும் போது சட்டத்தின் கீழ் அபராதமும் மற்றும் வட்டியும் விதிக்கப்படும். இந்த அபராதத்திலிருந்து தவிர்க்க வேண்டுமானால், சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட அவகாசத்தைப் பயன்படுத்தி அவற்றை உடனடியாகச் செலுத்த வேண்டும் என திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தகவல்களின்படி, 2023ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்குள் திணைக்களத்தினால் வசூலிக்கப்பட வேண்டிய வரித் தொகை 1,066 பில்லியன் ரூபாவாகும். வரி செலுத்துவோர் சமர்ப்பித்த மேல்முறையீடுகள், நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் காரணமாக வரி நிலுவைத் தொகை அதிகரித்துள்ளதாக மேற்படி திணைக்களம் குறிப்பிடுகின்றது.


### நிலுவைத்திருத்துதல்:

நிலுவையில் உள்ள வரிகள் இருப்பின், அவற்றை இம்மாதம் அக்டோபர் 30ம் திகதி அல்லது அதற்கு முன்பாக செலுத்துவதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டிருந்தது.

### சட்ட நடவடிக்கைகள்

அவகாசத்தை பயன்படுத்தி வரி செலுத்தாத நபர்கள், சட்டப்படி எதிர்கொள்ளும் நடவடிக்கைகளில் பின்வரும் அம்சங்கள் அடங்கும்:

- தாமதமாக வரி செலுத்துபவர்களுக்கு அபராதம் மற்றும் வட்டியும் விதிக்கப்படும்..
- திருத்திக்கொண்ட விவரங்களை அனுப்பத் தவறுபவர்களுக்கு விசாரணை.
- சட்ட ரீதியான நேர்மையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

### வரி செலுத்துபவர்களுக்கு வழங்கப்படும் கூடுதல் அறிவுறுத்தல்கள்

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்பு, வரி செலுத்துவதில் தாமதம் செய்யும் நபர்களுக்கு வலியுறுத்தலாக உள்ளது. வரி செலுத்துவதில் காலம் தாழ்த்தினால், நீண்டகால நிதி சிக்கல்களைச் சந்திக்க வேண்டிய நிலை உருவாகக்கூடும். அவை அடங்கியவை:

### 1. அபராதம் மற்றும் வட்டி:

வரி செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டால், அபராதமும் மேலதிகமாக தாமதமாகும் ஒவ்வொரு நாளும் வட்டியும் செலுத்த வேண்டிய கட்டாயம் உண்டாகும். இது வரி செலுத்துவோரின் மீது நிதிநெருக்கடியை ஏற்படுத்தும்.

### 2. சட்ட நடவடிக்கைகள்:

உத்தரவுகளை மீறுவோர் எதிர்கொள்ள வேண்டிய சட்ட நடவடிக்கைகள் மிகக் கடுமையானவையாக இருக்கும். வரி கணக்கெடுப்பில் சிக்கல், கணக்கில் தவறுகள் மற்றும் தாமதங்கள் நேர்ந்தால், குற்றப் புலனாய்வுத் துறை (CID) மூலம் விசாரணைகள் தொடங்கப்படலாம்.

### 3. சம்பந்தப்பட்ட தொழில்

**நிறுவனங்கள்:**

வரிசெலுத்துவதைத்தவிர்ப்பதாலோ அல்லது தவறான தகவல்களை அளிப்பதாலோ சம்பந்தப்பட்ட நபர்களின்தொழில்நிறுவனங்கள் பரிசோதிக்கப்படும். இது அவர்களின் நம்பிக்கைக்கு மற்றும் தொழில்துறையில் அவர்களின் மவுசுக்கும் நன்மதிப்பிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

**வரி செலுத்துவதின் முக்கியத்துவம்**

சரியான முறையில் வரி செலுத்துவதன் மூலம் நாடு பொருளாதார முன்னேற்றம் அடையும் என்பதைக் கருத்தில் கொண்டு, அனைவரும் சட்டப்படி தங்கள் வரி கடமைகளை நிறைவேற்ற வேண்டும். வரி செலுத்துவதில் வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மை இருப்பது அவசியம். இது மட்டுமின்றி, முறையாக வரி செலுத்துபவர்களுக்கு பல்வேறு வகையான சலுகைகள் மற்றும் வட்டியில்லா கால அவகாசம் போன்ற நன்மைகள் கிடைக்கும்.

**தனிநபர் வரிகள் மற்றும் நிறுவன வரிகள்**

இலங்கையில் வருமான வரி இரண்டு முக்கிய பிரிவுகளுக்கு உட்பட்டது:

**1. தனிநபர் வரி: பொதுமக்கள் அவர்களின் ஆண்டு வருமானத்திற்கு ஏற்ப செலுத்த வேண்டிய வரி.**

**2. நிறுவன வரி: அனைத்து வணிக நிறுவனங்களும், தங்களது வருமானத்திற்காக செலுத்த வேண்டிய வரி.**

இந்த இரண்டு வகையானவரிகளுக்கும் கெடுவிதிகள் மற்றும் விதிக்கப்படும் அபராதங்களின் விபரங்கள் ஒரே விதமாக இருக்கும். எனவே, அனைவரும் தங்களின் வரி கடமைகளை சரியாக பூர்த்தி செய்து, சட்டரீதியான வழிமுறைகளைப் பின்பற்றுவது அவசியம்.

2023-2024ம் ஆண்டிற்கான வரி செலுத்துவதற்கான இறுதிக் காலக்கெடு முடிவடைவதை முன்னிட்டு, அனைத்து வரி செலுத்துபவர்களும் தங்களின் கணக்குகளை சரியாக நிரப்பி வரிசெலுத்துவது மிக மிக அவசியம். வரி செலுத்துவதில் பிற்போடுதல் உங்களுக்கு அதிக சிக்கல்களை உருவாக்கலாம், எனவே தரப்பினரால் வழங்கப்பட்ட தகவல்களைப் பின்பற்றிக் காலத்தின் நடையில் செல்வது நல்லது.

வரி செலுத்துவதற்கான முறை மற்றும் அவசியமான ஆவணங்கள்

வரி செலுத்துனர்கள் தங்களது வரி கடமைகளை நிறைவேற்றும் போது, அவசியமான ஆவணங்களையும் சான்றுகளையும் தயார் செய்திருக்க வேண்டும். வரி கணக்கெடுப்பில் இருந்து, செலுத்த வேண்டிய வரியை கணக்கிடும் வரை, பின்பற்ற வேண்டிய சில முக்கிய கட்டளைகள் உள்ளன:

**1. வருமானம் மற்றும் செலவுகள் கணக்கிடுதல்:**

வருடாந்திர வருமானம், வணிகத் தரவுகள் மற்றும் பிற நிதி தொடர்பான தகவல்கள் தெளிவாக பதிவு செய்யப்பட வேண்டும். இதில் சம்பளம், வணிக இலாபம், சொத்து வருவாய் மற்றும் கையிருப்பு நிதிகள் ஆகியவை அடங்கும்.

**2. கடன்கள் மற்றும் செலவுகளை கணக்கீடு செய்தல்:**

வரியின்மை மற்றும் வரியிலிருந்து விலக்கு பெறுவதற்கான வழிகள் சில விதிகளின்படி உள்ளன. சட்டப்படி இந்த கழிப்புகளை சரியாகப் பதிவு செய்தால், குறைந்த வரி செலுத்துவோருக்கான சலுகைகள் பெற முடியும்.

**3. சான்றுகள் மற்றும் ஆவணங்கள்:**

வரி செலுத்துவதற்கான நேரத்தில் தேவையான சான்றுகள், வங்கிக் கணக்கு அறிக்கைகள், வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான ரசீதுகள்ஃ பற்றுச்சீட்டுக்கள் போன்றவை சரியாக பேணப்பட / சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த ஆவணங்கள் திணைக்களத்தால் கேட்டுக் கொள்ளப்படும் போதும், வரி கணக்கெடுப்பிற்கான அடிப்படை ஆதாரமாகவும் அமையும்.

**வரி செலுத்துவதில் இணையத்தள வசதி**

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியின் அடிப்படையில், உள்நாட்டு இறைவரித் திணைக்கள இணையதளத்தின் மூலம் வரி செலுத்துவதற்கான வசதிகளை வழங்கியுள்ளது. ஆன்லைன்ஃ நிகழ்நிலை முறையில் வரி செலுத்தும்போது, சம்பந்தப்பட்ட தகவல்களை சரியாகப் பதிவு செய்து உறுதிப்படுத்த வேண்டும்.

**ஆன்லைன் வரி செலுத்தும் முறை:**

1. திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்திற்கு சென்று உள்நுழையவும்.

2. உங்கள் வரி கணக்குகளை சரிபார்த்து, தேவையான கட்டுப்பாடுகளை உள்ளீடு செய்யவும்.

3. ஆன்லைன் /நிகழ்நிலை பரிவர்த்தனைகளைச் செயல்படுத்தி, பணத்தைத் தவணையாக அல்லது முழுமையாக செலுத்தவும்.

4. பரிவர்த்தனை முடிந்த பிறகு, திணைக்களத்திலிருந்து பெறப்படும் மின்னஞ்சல் அல்லது ரசீதைப் பதிவிறக்கம் செய்து வைத்துக் கொள்ளவும்.

**வரிவிலக்கு மற்றும் சலுகைகள்**

சில பணி வகைகளுக்கான வரிவிலக்குகள் மற்றும் சலுகைகள் இருந்தாலும், இவை வரிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளின் கீழ் மட்டுமே கிடைக்கும். பொதுவாக, கீழ்கண்ட வகைகளுக்கான நபர்களுக்கு இவ்வகை சலுகைகள் வழங்கப்படுகின்றன:

- சிறப்புப் பதவிகளில் உள்ளவர்கள்.
- ஓய்வூதியத் தொகை பெறுபவர்கள்.

**வரி செலுத்துவதின் சமூக பொறுப்பு**

கடந்த ஒன்பது மாதங்களில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 1,423 பில்லியன் ரூபா வரி வருமானத்தை ஈட்டியுள்ளது. 75 பில்லியன் ரூபா வருமானப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. 2023/24 மதிப்பீட்டு ஆண்டிற்கான வரி செலுத்தும் காலம் செப்டம்பர் 30ம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. எவ்வாறாயினும், இவ்வருட இறுதிக்குள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமான இலக்கான 2024 பில்லியன் ரூபாவை எட்டுவது நெருக்கடியாக இருக்கும் என நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வரியைச் செலுத்துவது எவ்வகையிலான மக்களுக்கும் சமூக பொறுப்பின் அடையாளமாகும். பொதுநலத்திற்காக அரசால் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு வரி செலுத்தும் மக்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். கற்றல், சுகாதாரம், பொது நலத்திட்டங்கள் போன்றவற்றுக்கு நிதி திரட்டுவதில் வரிகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்கின்றன.

எனவே, வரி செலுத்துவது ஒவ்வொரு குடிமகனும் பின்பற்ற வேண்டிய சட்டப்பூர்வ கடமையாகும். நாட்டின் வளர்ச்சிக்கான ஆதாரமாக வரிகள் விளங்குகின்றன என்பதையும், வரி செலுத்துவதை புறக்கணிப்பது நிதி மற்றும் சட்ட ரீதியான சிக்கல்களை உருவாக்கக்கூடும் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

2023-2024 மதிப்பீட்டு ஆண்டிற்கான வரி செலுத்தும் அனைத்து வரியாளர்களும் தங்களது வரியை தவறாமல் செலுத்த வேண்டும். அவ்வாறன்று தாமதம் ஏற்பட்டால், சட்டப்படி கடுமையான நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். ஒவ்வொரு நபரும் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து, வரி செலுத்துவதில் நேர்மையுடன் இருக்க வேண்டும். இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். மேலும் 2023-2024 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரிக்கோப்பினை வருகின்ற நவம்பர் மாதம் 30-ம் தேதி அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டியது ஒவ்வொரு வரி செலுத்துவோரினதும் கடமையாகும்.

# சிறந்த பெண் தொழில் முயற்சியாண்மையாளருக்கான விருதினை பெற்ற பெண்மணியின் வெற்றிக் கதை

ஹஸ்பர் ஏ ஹலீம்

**சமூகத்தில் தான் ஒரு பெண்ணாக நின்று முன்னேற வேண்டும் ஆண்கள் மாத்திரம் தான் சுயதொழில் செய்ய வேண்டும் அதனை சந்தைப்படுத்த வேண்டும் என்ற நிலை இன்றி பெண்களும் சாதிக்கலாம் வறுமைக்கு இடமில்லாமல் தன்னை ஒரு முன்னுதாரணமாக நிறுத்தி தான் மூலமாக ஏனைய ஆறு குடும்பங்கள் இவளை நம்பி வாழ்கின்றன.**

"உயர்தரம் கற்றபின் வீட்டில் சும்மா இருந்து விடக்கூடாது என்பதற்காக ஒரு பேக் கம்பனியில் வேலைக்கு சென்றேன் அங்கு அவர்கள் தைப்பதை பார்த்து பழகிய நான் ஒரு மாதமும் 10 நாட்களுமே வேலை செய்ய கூடிய வாய்ப்பு கிட்டியது ஏனெனில் எனது கணவர் வேலைக்கு செல்வதை நிறுத்துமாறு கேட்டிருந்தார் அதனால் விலகினேன்" என திருகோணமலை முள்ளிப்பொத்தானை சேர்ந்த இயந்திரம் மூலமான பை உற்பத்தியாளரான எம்.ஆர்.பிஸ்ரியா எனும் சுயதொழில் முயற்சியாண்மையாளர் தெரிவித்தார்.

Trinco women 2 சிறந்த பெண் தொழில் முயற்சியாண்மையாளருக்கான விருதினை பெற்ற பெண்மணியின் வெற்றிக் கதை - பகுதி ஒன்றுகுறித்த பெண்மணி தையல் இயந்திரங்கள் மூலமாக பல பாடசாலை பைகள்,பெண்களுக்கான பைகள் என பல வகையான டிசைன்களில் உற்பத்திசெய்வதுடன்கடை ஒன்றைவைத்து கூலியாட்கள் வைத்து உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறார்.சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு (2023) மகளிர் விவகார அமைச்சின் மூலமாக நடாத்தப்பட்ட சிறந்த பெண் தொழில் முயற்சியாளருக்கான விருதினையும் திருகோணமலை மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

"ஆரம்பத்தில் 2500 ரூபாவை முதலாக கொண்டு ஆரம்பித்த எனது வீட்டில் சும்மா இருந்தேன் ஆனால் எனக்கு சும்மா இருக்க முடியாது என கணவரிடம் அடம்பிடித்தேன் பின்னர் தையல் மெசின் ஒன்றை வாங்கித் தந்தார் அதன் மூலமாக துணி வகைகளை கொண்டு முதலில் சிறிய சிறிய பைகளை தைத்துப் பழகினேன்" என சிறிய நடுத்தர தொழிலில் ஈடுபடும் குறித்த பெண்மணி கூறினார்.

பிஸ்ரியாவின் சொந்த ஊர் கண்டி திருகோணமலை முள்ளிப்பொத்தானையில் திருமணம்செய்து கொண்டார் மூன்று ஆண்



தொழில் தற்போது 10 இலட்சம் வரையாக அதிகரித்துள்ளது இதன் மூலமே மூலதனப் பொருட்களை கொள்வனவு செய்து தொழிலை நல்ல முறையில் கொண்டு செல்கிறேன் ஆரம்பத்தில் வேலையை விட்டு விலகுமாறு எனது அன்புக் கணவர் கூறினார் பின்னர் ஆறு மாதங்களாக

பிள்ளைகளுக்கு தாயான இந்த பெண்மணி வாழ்க்கையில் பல தடைகளை தாண்டி முன்னேறியுள்ளார் பல சவால்களுக்கும் முகங்கொடுத்துள்ளார். ஆரம்ப காலத்தில் தனது தொழிலை தொடங்கிய பின் சிறிய வருமானமீட்டல் ஊடாக ஜுகி தையல் இயந்திரத்தை கொள்வனவு செய்து படிப்படியாக முன்னேறி தனது உற்பத்திகளை பாரிய சந்தைப்படுத்தலுக்கு உட்படுத்தி தானே தன்னகத்தே வருமானத்தை அதிகரித்து கொண்டார்.தற்போது தனது பை உற்பத்தி கடையில் ஆறு பெண் ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

"சந்தைப்படுத்துவதில் பல சிரமங்களை முதலில் எதிர் கொண்ட நிலையில் தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் சிறு கைத்தொழில் உற்பத்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய திருமதி சேகரி என்பவர் எனது வீட்டுக்கு வந்து என்



உற்பத்திகளை பார்வையிட்டார் அதன் பின் சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி தந்தார்"

இக்கட்டான சூழ் நிலையில் இத் தொழிலில் முன்னேற வேண்டும் என நினைத்த குறித்த பெண்மணி கணவனின் வெறுப்பு பேச்சான தொழில் செய்ய கூடாது போக வேண்டாம் என்ற உணர்வினை வைத்து தடைகளை உடைத்தெறிந்து ஒரு சிறந்த தையல் பயிற்சி வளவாளராகவும் தற்போது திறம்பட செயற்பட்டு வருகிறார்.

"கண்டியில் அவ்வப்போது குடும்பத்தில் இது வரைக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த போது நால்வர் மரணித்தார்கள் உடனடியாக மரண வீட்டுக்கு இங்கிருந்து சென்றேன் பல கவலைகள் நிறைந்த அந்த சோகமான நேரத்திலும் மனமுடைந்து போகவில்லை.

தொழிலை விட வில்லை எனது தொழில் முயற்சிகளை கண்டு கொண்ட USAID நிறுவனத்தினர் ஐந்து இயந்திரங்களை வழங்கியுள்ளார்கள் இதன் மூலம் ஆறு இளம் பெண் யுவதிகளுக்கு தொழில் வழங்கியுள்ளேன்"

Trinco women 1 சிறந்த பெண்தொழில் முயற்சியாண்மையாளருக்கான விருதினை பெற்ற பெண்மணியின் வெற்றிக் கதை - பகுதி ஒன்றுதனது திறமை விடா முயற்சி மூலமாக ஆரம்பத்தில் சந்தை வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதற்காக தொழிலை விட்டு விடாமல் தன்னம்பிக்கை மூலமாக முன்னேற வேண்டும் என நினைத்து அந்த நாள் ஞாபகத்தோடு தற்போது பல பயிற்சி நிலையங்களில் வளவாளராக தனது திறமையை வெளிப்படுத்தி பல ரூபாக்களை மாத வருமானங்களாக பிஸ்ரியா பெற்று வருகிறாள்.

தனது வீடானது சிறிய வீடாக இருந்தது மழை காலங்களில் அதிக காற்று வீசிகின்ற போது ஒரு முறை மரம் முறிந்து வீட்டின் மீது விழுந்ததால் ஒரு பகுதி நொறுங் கியது சில தையல் உபகரணங்களும் சேதமாக்கப்பட்டன இதனால் ஒரு தொகை பணம் தேவைப்பட்டது குறித்த பணம் கிடைக்காததால் வங்கியில் கடனுக்காக விண்ணப்பம் செய்யப்பட்ட போது வங்கியால் பல நிபந்தனைகளை முன்வைத்து விண்ணப்பம் கிடைக்கப் பெற்று நிராகரிக்கப்பட்டதாகவும் இங்கு பகிர்ந்து கொண்டார்." அரச வங்கிகளில் கடன்களை பெறுவது மிகவும் கடினம்" எனவும் கூறினார்.

தனது சுயதொழில் மூலமாக வருமானத்தை ஈட்டிக் கொண்ட படியாக ஒரு இளமானிப் பட்டத்தையும் நிறைவு செய்து கொண்டார் அதன் பின் தையல் பயிற்சியில் தேசிய தொழிற் தகைமை மட்டம் ஐ உம் பூர்த்தி செய்த நிலையில் தொழில்வாண்மை தகைமையையும் தன்னகத்தே வைத்துக் கொண்ட இந்த பெண்மணி திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அரச அரச சார்பற்ற தையல் பயிற்சி நிலையங்களுக்கு ஒரு வளவாளராகவும் தன்னை தயார்படுத்தி கொண்டு மேலதிகமான வருமானம் ஈட்டல் என்றவகையில் மாத வருமானமாக 50 ஆயிரம் ரூபாவுக்கும் மேலாக இலாபத்தை தேடிக் கொள்கிறார்.

சுறு சுறுப்பான நடை பாவனை உரத்த குரலில் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகக் கூடிய திறமைகளை கொண்டும் காணப்படுகிறாள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் மாத வருமானமாக 20 ஆயிரம் ரூபா பெற்றவள் தற்போது அது பல மடங்காக அதிகரித்துள்ளது.

"அரச பேருந்திகளில் தான் ஏனைய இடங்களுக்கு வளவாளராக செல்வேன் அதிக வெப்ப நிலை காரணமாக தலைவலி ஏற்படும் இதனால் உடல் சோர்வு அவ்வப்போது ஏற்பட்டாலும் அதனை பொறுட்படுத்தாது சுயமாக உழைக்க வேண்டும்" என கூறினார். மூன்று பாடசாலை செல்லும் ஆண் பிள்ளைகளை படித்து எதிர்காலத்தில் பல கனவுகளுடன் வாழ வேண்டும் என யோசிக்கின்ற இந்த பெண் தனது இரண்டாவது மகனை புத்தளத்தில் உள்ள மேர்சி எனது பாடசாலையில் கற்பதற்காகன வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்தும் உள்ளார்.

Trinco women 3 சிறந்த பெண் தொழில் முயற்சியாண்மையாளருக்கான விருதினை பெற்ற பெண்மணியின் வெற்றிக் கதை - பகுதி ஒன்றுதற்போதைய தொழில் செய்யும் உற்பத்தி பகுதியானது சிறிய இடமாக உள்ளதால் தொழிலை மேற்கொள்வது கடினமாக உள்ளது இதனை விருத்தி செய்ய வேண்டும் என பலத்த எதிர்பார்ப்பு அவளது மனதுக்குள் குடி கொண்டிருக்கிறது " 15 இலட்சம் வங்கி கடனுக்காக அப்போது முதல் விண்ணப்பம் செய்து அது கிடைக்கவில்லை அதனை விட்டு விட்டேன்" என கூறினாள்.

சமூகத்தில் தான் ஒரு பெண்ணாக நின்று முன்னேற வேண்டும் ஆண்கள் மாத்திரம்தான் சுயதொழில் செய்ய வேண்டும் அதனை சந்தைப்படுத்த வேண்டும் என்ற நிலை இன்றி பெண்களும் சாதிக்கலாம் வறுமைக்கு இடமில்லாமல் தன்னை ஒரு முன்னுதாரணமாக நிறுத்தி தான் மூலமாக ஏனைய ஆறு குடும்பங்கள் இவளை நம்பி வாழ்கின்றன.

சந்தைப்படுத்தலை மேற்கொள்ள பல வழி வகைகளை பயன்படுத்தி உள்ளார். சமூக வலைத்தளம் ஊடாக இணைய வசதி சந்தை வாய்ப்பு மற்றும் தனது கடைக்கு நேரடியான சில்லறை மொத்த விற்பனை என பல சந்தைப்படுத்தல்களை விருத்தி செய்து புன்முறுவலுடன் சந்தோசமான குடும்ப வாழ்க்கையினை வாழ்ந்து வருகிறார். தனது கணவனின் தகப்பன் ஒரு முதியோர் அவரும் இவரது கண்காணிப்பில் வீட்டில் வசித்து வருகிறார் வயோதிபரை கவனித்தும் தொழிலை முன்னெடுத்துச் செல்லும் மனம் தளராத ஒரு சாதனை பெண்ணாக இந்த பெண் மாறி வருகிறாள் இதன் மூலம் நாட்டின் பொருளாதார துறைக்கும் பாரிய பங்களிப்பு செய்து வரும் ஒரு இரும்புப் பெண்ணாக திகழ்கிறாள்.




கொரேனா காலங்களில் விற்பனை துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது அதனை பொறுட்படுத்தாது எஞ்சியிருக்கும் பல மீற்றர் கொண்ட துணி வகைகளை கொண்டு பைகளை தைத்து சேமித்து வைத்தாள் கொரோனாவில் இருந்து நாடு மீண்டதன் பின்னர் சந்தை வாய்ப்பை அதிகரித்து அதில் இருந்து கிடைக்கப் பெற்ற இலாபத்தில் ஒரு தையல் இயந்திரத்தையும் வாங்கிய பிஸ்தியா என்று சிறந்த தொழில் முனைவோர் ஆகவும் பலருக்கு வழிகாட்டியாகவும் வாழ்ந்து வருகின்றார்.

# தினை என்றால் என்ன?

க.வனஜா



தினை, செட்டாரியா இட்டாலிகா என்ற தாவரவியல் பெயருடன் அழைக்கப்படும் இது, ஒரு வகையான புல் வகை. தினை பல நூற்றாண்டுகளாக ஆசிய உணவு வகைகளில் முக்கிய அங்கம் வகிக்கிறது. அதிக சத்துள்ள தானியமான இது, பெரும்பாலும் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உணவு ஆதாரமாக பயன்படுத்தப்படுகிறது. மேலும், இது கம்பு, வரகு போன்ற பிற சிறுதானியங்களை ஒத்தது. வைட்டமின்களும் தாதுப்பொருட்களும் நிறைந்த இந்த சிறுதானியத்தின் ஒரு தனித்துவமான சுவையால் பல உணவுப் பதார்த்தங்களில் சேர்க்கப்படுகிறது.

## தினை பயிர், Thinai crop

### தினை எங்கே வளர்கிறது?

பல்வேறு காலநிலையிலும் மண்ணிலும் வளரக்கூடிய வறட்சி தாங்கும் பயிரான தினை, பொதுவாக மற்ற பயிர்கள் செழித்து வளராத வறண்ட பகுதிகளில் வளரக்கூடியது. இந்த சிறிய, மஞ்சள்நிற தானியங்கள் ஆசியா, ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா உட்பட உலகின் பல பகுதிகளில் காணப்படுகிறது. இது ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவின் சில பகுதிகளிலும் வளர்க்கப்படுகிறது. ஆசியாவில் குறிப்பாக சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் இது பிரபலமாக உள்ளது. இந்தியாவில் முக்கியமாக ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய தென் மாநிலங்களில் தினை பயிரிடப்படுகிறது.

### தினை மற்ற மொழிகளில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

இந்தியில் இது "கங்கினி" என்றும், தமிழில் "தினை" என்றும் அழைக்கப்படுகிறது. தெலுங்கில் இது "கொர்றா" என்றும், கன்னடத்தில் "நவனே" என்றும் அழைக்கப்படுகிறது. மராத்தியிலும் குஜராத்தியிலும், இது "கங்" என்றும், பெங்காலியில் "காங்" என்றும் அழைக்கப்படுகிறது. ஜப்பானிய மொழியில், "அவ" என்று அழைக்கப்படும் இது, சீன மொழியான மாண்டரினில் "சு" என்று அழைக்கப்படுகிறது. கொரிய மொழியில் இது "ஜோ" என்று அழைக்கப்படுகிறது.

### தினை அரிசி நன்மைகள் (Thinai Benefits in Tamil)

தினையில் உள்ள ஊட்டச்சத்துக்கள் என்னென்ன?

தினையில் இரும்பு மற்றும் கால்சியம் போன்ற சத்துக்கள் நிறைந்திருப்பது மட்டுமின்றி, gluten எனப்படும் பசைத்தன்மை இல்லாததால், gluten sensitivity பிரச்சனை உள்ளவர்களுக்கு ஏற்ற ஒரு விருப்பத் தேர்வாக அமைகிறது. தினையில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால் ஆரோக்கியமான செரிமானத்தை மேம் படுத்த உதவுகிறது. மேலும், சிறந்த இதய ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும் விதமாக, கொழுப்பின் அளவைக் குறைக்க இது உதவுகிறது. எந்தவொரு டயட் முறையிலும் சிறந்த பங்களிப்பை வழங்கும் தினை, பெரும்பாலும் ஊட்டச்சத்து நிபுணர்களால் பெரிதும் பரிந்துரைக்கப்படுகிறது.

ஆனால் தினையின் நன்மைகள், அவற்றின் ஊட்டச்சத்து மதிப்பையும் தாண்டி நிறைய இருக்கின்றன.

சாகுபடி செய்வதற்கும் அறுவடை செய்வதற்கும் எளிதான தினை, சவாலான பருவநிலை நிலவும் பகுதிகளில் முக்கிய உணவு ஆதாரமாக அமைகிறது. உண்மையில் நெல், கோதுமை போன்ற மற்ற பயிர்களை விட தினை வறட்சியையும் வெப்பத்தையும் தாங்கும் திறன் கொண்டது என நிரூபிக்கப்பட்டுள்ளது. இது வறண்ட பகுதிகளில் உள்ள மக்கள், கடினமான சுற்றுச்சூழலை எதிர்கொண்டாலும் கூட அவர்களுக்கு ஊட்டமளிக்க துணைநிற்கிறது. ஒரு காலத்தில், தினை ஆசிய கலாச்சாரங்களில் பிரதான உணவாக இருந்தது. கோதுமை மற்றும் அரிசியின் சாகுபடி பரவலாக அதிகரித்ததன் காரணமாக, துரதிருஷ்டவசமாக தினையின் சாகுபடி குறைந்தது. எதிர்காலத்தில், புவி வெப்பமடைதல் காரணமாக உலகின் பல பகுதிகளில் சுற்றுச்சூழல் மாற்றங்கள் எதிர்பார்க்கப்படும் நிலையில், தினை போன்ற வறட்சி தாங்கும் பயிர்கள் நமது உணவுத் தேவைகளுக்குத் தீர்வாக இருக்கும்.

### சர்க்கரை நோய்க்கு தினை நல்லதா?

## தினை சாதம், Thinai sadham

தினை குறைந்த கிளைசெமிக் அளவைக் கொண்டுள்ளது. அதாவது இரத்த சர்க்கரை அளவை அதிகப்படுத்தும் வாய்ப்பு தினையில் குறைவு. இது நீரிழிவு நோயாளிகளுக்கும், உடல் எடையை குறைக்க முயற்சிப்பவர்களுக்கும் ஒரு நல்ல தேர்வாக அமைகிறது. இதற்கு இன்னும் கூடுதல் ஆராய்ச்சி தேவைப்பட்டாலும், குளுக்கோஸ் டாலரன்ஸ் குறைபாடு உள்ளவர்களின் குளுக்கோஸ் அளவை குறைப்பதாக குறிப்பிடத்தக்க ஆய்வுகள் உள்ளன.

### எடை குறைப்புக்கு தினை பலன் தருமா?

அதன் குறைந்த கிளைசெமிக் அளவும், நார்ச்சத்து அதிகம் உள்ளதாலும் இது எடைக் குறைப்புக்கு உதவும். இதிலுள்ள நார்ச்சத்து, நீண்ட நேரம் பசியின்றி நிறைவாக உணர உதவுகிறது. மேலும், இது ஒரு முழுமையான தானியமாக இருப்பதால், அதிக கலோரிகள் இல்லாமல் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது. தினை எடை குறைப்பு செயல்முறைக்கு பயனுள்ளதாக இருந்தாலும், ஆரோக்கியமான எடையை தொடர்ந்து பராமரிப்பதற்கு ஒரு சமச்சீரான உணவும் தொடர்ச்சியான உடல் பயிற்சிகளும் முக்கியம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

### தினை கர்ப்பிணிப் பெண்களுக்கு நல்லதா?

தினை கர்ப்பிணிப் பெண்களுக்கு மிகச்சிறந்த உணவு என்று கூறப்படுகிறது. இதில் நார்ச்சத்து அதிகம் உள்ளது.

ஆரோக்கியமான செரிமானத்திற்கு உதவுவதோடு, கர்ப்ப காலத்தில் ஏற்படும் பொதுவான பிரச்சனையான மலச்சிக்கலைத் தடுக்கவும் தினை உதவுகிறது. தினை மெக்னீசியத்தின் சத்தினைக் கொண்டுள்ளதால் (100 கிராமில் 81 மி.கி), ஆரோக்கியமான எலும்புகளைப் பராமரிக்கவும், இருதய ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் துணைநிற்கிறது. கூடுதலாக, இதில் இரும்புச்சத்தும் வைட்டமின் டீ உட்பட பிற அத்தியாவசிய தாதுக்களும் நிறைந்திருப்பதால், தாய்க்கும் வளரும் குழந்தைக்கும் ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இருப்பினும் நினைவில் கொள்ளுங்கள், கர்ப்ப காலத்தில் எந்த உணவுமுறை மாற்றத்தையும் மேற்கொள்ளும் முன், உங்களது சுகாதார ஆலோசகரை முறையாக அணுகுவது நல்லது.

### தினை தக்காளி சாதம், Thinai Tomato Rice

### தினையை எப்படி சமைப்பது?



அரிசியைப் போல சமைத்து உண்ணலாம், அல்லது மாவாக அரைத்து Baking செய்து பயன்படுத்தலாம். சமைக்கும் முன் தண்ணீரில் ஊறவைத்து மென்மையாக்கிவிட்டு, பிரஷர் குக்கரில் வேக வைக்கலாம். பல்வேறு பலன்கள் கொண்ட தினை, எண்ணற்ற சமையல் ரெசிபிகளாகவும், பல்வேறு உணவுப் பதார்த்தங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன.

### தினை ரெசிபிகள் (Thinai Recipes in Tamil)

#### 1. தினை பிரியாணி

தினை பிரியாணி, Thinai Biriyani

நீங்கள் சுவையும் ஆரோக்கியமும் நிறைந்த ஒரு பிரியாணியைத் தேடுகிறீர்களென்றால், தினை பிரியாணியைத் தவிர வேறு எதையும் நாட வேண்டாம்! ஆராய்ச்சியின் படி, வழக்கமான அரிசி பிரியாணியுடன் ஒப்பிடும்போது, இந்த தினை பிரியாணி அதன் நிறம், தோற்றம், அமைப்பு, சுவை என அனைத்து விதத்திலும் அதிக சுயவபௌஜ பெற்றுள்ளது. நீங்களும் முயற்சி செய்து பாருங்கள்!



தேவையான பொருட்கள்

1 கப் தினை

2 கப் தண்ணீர்

சமையல் எண்ணெய் 1 மேசைக்கரண்டி

சீரகம் ½ தேக்கரண்டி

அரைத்த இஞ்சி ½ தேக்கரண்டி

1 கப் காய்கறிகள், (பட்டாணி, கேரட் மற்றும் குடைமிளகாய் போன்றவை) நறுக்கியது

மஞ்சள் தூள் -தேக்கரண்டி

சிவப்பு மிளகாய் தூள் 1 தேக்கரண்டி

கரம் மசாலா 1 தேக்கரண்டி

சுவைக்கேற்ப உப்பு

½ கப் தயிர்

½ கப் நறுக்கிய தக்காளி

½கப் நறுக்கிய கொத்தமல்லி

½கப் நறுக்கிய புதினா

½கப் வெட்டப்பட்ட பாதாம் பருப்பு

½கப் உலர் திராட்சை

2 தேக்கரண்டி நெய்

½கப் தண்ணீர்

பிரியாணி செய்வதற்கு கீழ்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்:

தினையை இரண்டு முறை நன்கு கழுவி, 45 முதல் 60 நிமிடங்கள் ஊற வையுங்கள்.

ஒரு பெரிய பாத்திரத்தில் எண்ணெயை மிதமான சூட்டில் வைத்து சீரகம் தாளித்து, அதில் நறுக்கிய தக்காளி, உப்பு, கரம் மசாலா மற்றும் சிவப்பு மிளகாய் தூள் சேருங்கள். தக்காளி மென்மையாக வேகும் வரை மூடி வைத்து சமைத்திடுங்கள்.

இஞ்சியைச் சேர்த்து மேலும் சிறிது நேரம் வதக்குங்கள்.

இதனுடன் நறுக்கி வைத்துள்ள காய்கறிகளை சேர்த்து மென்மையாகும் வரை வதக்குங்கள்.

தண்ணீரை வடித்துவிட்டு, தினையையும் அந்த பாத்திரத்தில் சேர்த்து கிளறுங்கள்.

பின்னர் இதில் தயிர் சேருங்கள்.

கொத்தமல்லி, புதினா, பாதாம் மற்றும் உலர்திராட்சையையும் சேர்த்து கிளறுங்கள்.

நெய் சேர்த்து, பின் தேவையான தண்ணீர் சேர்த்துக் கிளறுங்கள்.

தீயைக் குறைத்து, பாத்திரத்தை ஒரு மூடியால் மூடுங்கள். 15-20 நிமிடங்களுக்கு வேக வைக்கலாம் அல்லது தினை வேகும் வரை, பிரியாணி வாசம் வரும் வரை சமைக்கலாம்.

தீயை அணைத்து 5 நிமிடம் மூடி வையுங்கள்.

விரும்பினால், கொத்தமல்லி, புதினா, பாதாம், உலர் திராட்சைகளைத் தூவி பிரியாணியை அலங்கரித்து சூடாகப் பரிமாறி, ருசித்து மகிழுங்கள்!

#### 2. தினை இட்லி

தினை இட்லி, Thinai Idli



தேவையான பொருட்கள்:

1 கப் தினை

½கப் உளுத்தம் பருப்பு

½தேக்கரண்டி வெந்தயம்

ருசிக்கேற்ப உப்பு

செய்முறை:

தினையையும் உளுத்தம் பருப்பையும் நன்கு தண்ணீரில் கழுவுங்கள். தினையையும் உளுத்தம் பருப்பையும் தனித்தனியாக, குறைந்தது 6 மணிநேரம் அல்லது இரவு முழுக்க ஊற வைத்திடுங்கள்.

தண்ணீரை வடித்து எடுத்து, தனித்தனியாக நன்றாக விழுதாக அரைத்திடுங்கள். தினை மாவில் பருப்பு மாவைக் கலந்து சுவைக்கேற்ப உப்பு சேருங்கள்.

பாத்திரத்தை ஈரமான துணியால் மூடி, புளிக்க வைக்க வெதுவெதுப்பான இடத்தில் 8-12 மணி நேரம் வைத்திடுங்கள்.

மாவு புளித்த பிறகு, வெந்தயத்தை சேருங்கள்.

இட்லி அச்சுகளில் எண்ணெய் அல்லது நெய் தடவி, மாவை நிரப்பி, ஒரு ஸ்டீமரில் வைத்து, இட்லிகளை 10-15 நிமிடங்களுக்கு அல்லது வேகும் வரை ஆவியில் வேக வைத்திடுங்கள்.

இட்லிகளை சட்னி அல்லது சாம்பாருடன் சூடாகப் பரிமாறி, ருசித்து மகிழலாம்.

#### 3. தினை ரொட்டி

தேவையான பொருட்கள்:

1 கப் தினை மாவு

½கப் கோதுமை மாவு

½தேக்கரண்டி உப்பு

½கப் நெய்

½கப் சூடான தண்ணீர்

செய்முறை:

ஒரு கிண்ணத்தில் தினை மாவு, கோதுமை மாவு மற்றும் உப்பு ஆகியவற்றை ஒன்றாக சேர்த்து கலக்குங்கள்.

இந்த மாவு கலவையில் நெய் சேர்த்து, உதிரியாக இருக்கும்படி கலக்குங்கள்.

பின்னர் அதில் வெதுவெதுப்பான நீரை சிறிது சிறிதாக சேர்த்து, மாவு உருண்டையாகப் பிடிக்கும் பதத்திற்கு வரும்வரை கலக்குங்கள். மாவு மென்மையாகவும் நெகிழ்வாகவும் இருக்க வேண்டும், ஆனால் கையில் ஒட்டாமல் இருக்க வேண்டும். மாவு மிகவும் கெட்டியாக இருந்தால், சிறிது தண்ணீர் சேர்த்துக்கொள்ளுங்கள். அது மிகவும் ஒட்டும் தன்மையுடையதாக இருந்தால், இன்னும் சிறிது மாவு சேருங்கள்.

மாவை ஒரு எலுமிச்சை அளவில் சிறிய உருண்டைகளாக உருட்டிக்கொள்ளுங்கள்.

லேசாக மாவு தடவப்பட்ட ஒரு பலகையில் வைத்து, வட்டமாக தேய்த்துக்கொள்ளுங்கள்.

ஒருதவா அல்லது வாணலியை மிதமான சூட்டில் வைத்து, ரொட்டியை 1-2 நிமிடங்களுக்கு வேக வைத்திடுங்கள். பின், ரொட்டியை புரட்டிப் போட்டு, 1-2 நிமிடங்களுக்கு லேசாக பழுப்பு நிறமாக மாறும் வரை சமைத்திடுங்கள்.

ரொட்டி மீது சிறிது நெய் தடவி சூடாக பரிமாறலாம்!

### 4. தினை உப்புமா

தினை உப்புமா, Thinai Upma



செய்முறை:

தினையை நன்கு கழுவுங்கள்.

ஒரு பாத்திரத்தில் நெய் அல்லது சமையல் எண்ணெயை மிதமான சூட்டில் வைத்து சூடாக்குங்கள். அதில் கடுகு சீரகம் சேர்த்து தாளித்திடுங்கள்.

நறுக்கிய தக்காளி, நறுக்கிய கேப்சிகம் மற்றும் இஞ்சி சேர்த்து வதக்குங்கள்.

கேரட், பட்டாணி மற்றும் பச்சை பீன்ஸ் சேர்த்து, மேலும் 2-3 நிமிடங்களுக்கு அல்லது காய்கறிகள் சிறிது மென்மையாகும் வரை வதக்குங்கள்.

பின்னர் அதில் தினையைச் சேர்த்து, காய்கறிகளுடன் சேர்த்துக் கிளறலாம்.

தண்ணீர் சேர்த்து கொதிக்க வையுங்கள். வெப்பத்தை குறைத்து மூடி வைத்து, 15-20 நிமிடங்கள் அல்லது தண்ணீர் வற்றி, தினை நன்கு வேகும்வரை வைத்திருங்கள்.

சுவைக்கேற்ப உப்பு சேர்த்து, நறுக்கிய கொத்தமல்லியையும் சேர்த்து கிளறுங்கள்.

விரும்பினால் கூடுதலாக நறுக்கிய கொத்தமல்லி சேர்த்து அலங்கரித்து தினை உப்புமாவை சூடாகப் பரிமாறி, ருசித்து மகிழுங்கள்!

### 5. தினை லட்டு

தேவையான பொருட்கள்:

1 கப் தினை
1 கப் பனை சர்க்கரை / வெல்லம்
½ கப் நெய்
½கப் நறுக்கிய கொட்டை வகைகள் (பாதாம், முந்திரி மற்றும் பிஸ்தா)
1 தேக்கரண்டி ஏலக்காய் பொடி

செய்முறை:

தினையை மிதமான தீயில் வைத்து, அது லேசான பழுப்பு நிறமாகி நறுமணம் வரும் வரை வறுத்து, அதை ஆற வையுங்கள்.

வறுத்த தினையை ஒரு food processor அல்லது மிக்ஸியில் நைசாக அரைத்திடுங்கள்.

ஒரு பாத்திரத்தில் நெய் விட்டு மிதமான தீயில் சூடாக்கி, அதில் அரைத்த தினை மாவை சேர்த்திடுங்கள். கலவை சிறிது பழுப்பு நிறமாகி, வறுத்த வாசனை வரும் வரை தொடர்ந்து அதைக் கிளறுங்கள்.

அடுப்பிலிருந்து கடாயை இறக்கி, பனை சர்க்கரை / பொடித்த வெல்லம் மற்றும் ஏலக்காய் தூள் சேர்த்து நன்றாக கிளறுங்கள்.

அதை ஒரு கைப்பிடி அளவு எடுத்து லட்டு உருண்டையாக பிடிக்கவும்.

லட்டுகளின் மேற்பரப்பில் ஒட்டிக்கொள்ளும் விதமாக, நறுக்கிய கொட்டை வகைகளை போட்டு உருட்டுங்கள்.

லட்டுகளை இனிப்பு பலகாரமாக அல்லது சிற்றுண்டியாகப் பரிமாறலாம்.

### தினை குடைமிளகாய் ரெசிபி

தினை குடைமிளகாய் ரெசிபி, Thinai Kudaimilagai Recipe



தேவையான பொருட்கள்:

குடைமிளகாய் 6 (2 பச்சை, 2 சிவப்பு, 2 மஞ்சள் மிளகாய்கள் இருந்தால் நன்றாக இருக்கும்!)
தினை 3 கப் (சாதமாக சமைத்தது)
கருப்பு சுண்டல் (வேகவைத்தது)
தக்காளி ½ கப் (நறுக்கியது)
பச்சை பீன்ஸ் ½ கப் (நறுக்கியது)
மிளகு சேர்த்த பாலாடைக்கட்டி (Pepper Jack cheese) ½கப்
ஆலிவ் எண்ணெய் 3 மேசைக்கரண்டி
எலுமிச்சை சாறு 2 மேசைக்கரண்டி
கொத்தமல்லி இலை 1 கைப்பிடி (நறுக்கியது)
சீரகப்பொடி 1 தேக்கரண்டி
மிளகுத்தூள் 2 தேக்கரண்டி
உப்பு 2 தேக்கரண்டி

செய்முறை:

Oven அடுப்பை 176°C/350°F வெப்பநிலைக்கு முன்கூட்டியே சூடாக்குங்கள்.

குடைமிளகாய்களின் மேற்பகுதியை வெட்டி, உள்ளேயிருக்கும் வெள்ளையான தண்டு பகுதியையும் விதைகளைகளையும் அகற்றுங்கள்.

ஒரு கிண்ணத்தில் மற்ற அனைத்து பொருட்களையும் சேர்த்து, ஒன்று அல்லது இரண்டு முறை லேசாக கிளறுங்கள்.

கிளறி வைத்துள்ள பொருட்களை ஒவ்வொரு மிளகாயிலும் நிரப்புங்கள்.

மேற்புறத்தில் பாலாடைக்கட்டியைத் (Cheese) தூவுங்கள்.

ஒரு பேக்கிங் தாளில் வைத்து, மிளகாய்கள் மென்மையாக வேகும் வரை சுமார் 25-30 நிமிடங்கள் பேக் செய்யுங்கள்.

சூடாகப் பரிமாறலாம்.

எதிர்காலத்தில் சிறுதானியங்களின் பங்கு தொடர்ந்து மாறிக்கொண்டே வரும் நம் உலகில் எதிர்வரும் ஆண்டுகளில் தினை போன்ற சிறுதானியங்கள் முக்கிய பங்கை வகிக்கப் போகின்றன. பெருகிவரும் உலக மக்கள்தொகையாலும் காலநிலை மாற்றத்தின் விளைவுகள் அதிகமாகி வருவதாலும், ஆரோக்கியமான சத்தான உணவு ஆதாரங்களின் தேவை அதிகரிக்கிறது. இந்த சூழலில், அனைத்து மக்களும் தங்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதை உறுதி செய்வதில், தினைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

எதிர்காலத்தில், மனித நாகரிகத்தின் முக்கிய அங்கமாக தினைகள் இருக்கும் என்பது தெளிவாகிறது. சத்தான உணவு ஆதாரமாகவும், பலவகையான உணவுகளில் சுவையான மூலப்பொருளாகவும், சவாலான காலநிலையில் வாழும் மக்களுக்கு ஆரோக்கியமான விருப்பத் தேர்வாகவும், பல சூழல்களில் இந்த சிறுதானியம் மனிதகுலத்திற்கு தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கும்.

# விளாம்பழத்தில் இத்தனை நன்மைகளா?



வாய்க் கசப்பு போன்றவை மாறும். பிரசவித்த பெண்களின் வயிற்று உள்ளுறுப்புகளுக்கு அதிக சக்தி கிடைக்கும்.

* பெண்களுக்கு மார்பகம், கருப்பையில் புற்றுநோய் வராமல் தடுக்கும். நல்ல வலி நிவாரணியாகவும் விளாம்பழம் செயல்படுகிறது.

* இதன் கொழுந்து இலையை நீரில் போட்டுக் குடித்து வர வாயுத் தொல்லை ஒழியும். பித்தத்தைத் தணிக்கவும் இதன் இலை உதவுகிறது.

* இப்பழத்துடன் வெல்லம் சேர்த்து பிசைந்து 21நாள்கள் சாப்பிட்டு வந்தால் பித்தம் சம்பந்தமான அனைத்துக் கோளாறுகளும் குணமாகும். பித்தத்தால் தலைவலி, கண்பார்வை மங்கல், காலையில் மஞ்சளாக வாந்தி எடுத்தல், சதா நேரமும் வாயில் கசப்பு, அதிக வியர்வை, பித்தம் காரணமாக இளநரை, நாவில் ருசி உணர்வு அற்ற நிலை போன்றவற்றை விளாம் பழம் குணப்படுத்தும்.

* விளாம் பிசினை உலர்த்தித் தூள் செய்து காலை, மாலை தலா ஒரு சிட்டிகை வெண்ணெய்யுடன் கலந்து சாப்பிட வயிற்றுப் போக்கு, வெள்ளைப்படுதல், நீர் எரிச்சல், மேக நோய், உள்ளுறுப்பு ரணம், மாதவிடாய் கோளாறு ஆகியவை தீரும். இதற்கு உப்பு இல்லாப் பத்தியம் தேவை.

விளாம்பழத்தில், இரும்புச்சத்தும், சுண்ணாம்புச்சத்தும், விட்டமின் யு சத்துக்களும் நிறைந்துள்ளன.. பித்தத்தை போக்கக்கூடிய மிகச்சிறந்த பழமாக இது திகழ்கிறது.. இந்த பழத்தில், வெல்லம் சேர்த்து பிசைந்து 21 நாட்கள் சாப்பிட்டு வந்தாலே, பித்த கோளாறுகள் மொத்தமும் நீங்கிவிடுமாம்.

குடல்ஆரோக்கியம்: குடல்ஆரோக்கியத்துக்கு தாராளமாக விளாம்பழம் சாப்பிடலாம்.. குடலிலுள்ள பூச்சி புழுக்களை அழித்து வெளியேற்றக்கூடியது இந்த பழம்.. அத்துடன், வயிற்று புண், வாய்ப்புண்ணையும் ஆற்றுகிறது.. அஜீரண குறைபாடு இருந்தாலோ, பசியின்மை ஏற்பட்டாலோ, விளாம்பழம் சாப்பிட்டு வந்தால் தீர்வு கிடைக்கும்.

மூட்டு வலிக்கும், முழங்கால் வலிக்கும் இந்த விளாம்பழம் உதவுகிறது.. கால்சியம் நிறைந்த இந்த பழங்கள், எலும்புகளுக்கும் பற்களுக்கும் உறுதியை தருபவை.. தயிருடன் விளாம்பழத்தை சேர்த்து சாப்பிடுவதால், எலும்புகள் பலம் பெறுமாம்.

உதிரப்போக்கு : விளாம்பழம் சாப்பிடுவதால் ரத்தம் அதிகரிப்பதுடன், கெட்ட செல்களை அழிக்கப்பட்டு, புதிய ரத்தம் சுரக்கிறது. கண்பார்வை தெளிவுபெற உதவுகிறது இந்த பழங்கள்.. பெண்களுக்கு ஏற்படும் ரத்தப்போக்கு, வெள்ளைப்படுதல் போன்ற பிரச்சினைகளுக்கு விளாம்பழம் போல சிறந்த தீர்வு இருக்க முடியாது..

குழந்தைகளுக்கு இந்த பழத்தை தருவதால், அவர்களது நினைவாற்றல் அதிகரிக்க செய்யும்.. நரம்பு தளர்ச்சி இருந்தால், இந்த பழத்தை வெல்லத்துடன் கலந்து சாப்பிடலாம்.. நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும் விளாம் மரத்தின் பிசினை அடிக்கடி சாப்பிட்டு வர, பெண்களுக்கு ஏற்படும் ரத்தப்போக்கு, வெள்ளைப்படுதல் போன்ற பிரச்சினைகள் தீரும்..

பெண்களுக்கு முகத்தில் ஏற்படும் பருக்கள் மற்றும் முக சுருக்கம், வறட்சி போன்றவை போக்கக்கூடிய இந்த விளாம்பழம். அதனால்தான், இந்த பழத்தை வைத்து, குளியல் பொடி தயார் செய்யப்படுகிறது.

சதைப்பகுதிகள்: இதற்கு, விளாம் பழத்தின் சதைப்பகுதியை தனியே எடுத்து காய வைக்க வைண்டும்.. அதனுடன் சம அளவு கஸ்தூரி மஞ்சள், பார்லி, பூலான் கிழங்கு, காய்ந்த ரோஜா மொட்டு போன்றவை எல்லாம் சேர்த்து அரைத்து வைத்து கொண்டால், சோப்புக்கு பதிலாக உடம்பில் பூசி குளிக்கலாம். இதனால், தோல் மிருதுவாவதுடன், கரும்புள்ளிகள் மறையும். பிரசவமான பெண்கள் விளாம்பழத்தை, கூழ்போல செய்து வந்தால் உள்ளுறுப்புகள் பலம் பெறும்.

பெண்களை விட ஆண்கள் தான் அதிக நோய்களுக்கு உள்ளாகின்றனர். இதற்கு அவர்களது வாழ்க்கை முறையும், பழக்கவழக்கங்களும் தான் முக்கிய காரணம்.

ஆண்கள் தங்களின் வாழ்க்கை முறை மற்றும் பழக்கவழக்கங்களில் ஒருசில மாற்றங்களை ஏற்படுத்தினால், நிச்சயம் வாழ்நாளின் அளவை அதிகரிப்பதோடு, நோயின்றி சந்தோஷமான வாழ்க்கையை வாழ முடியும்.

அது மட்டும் இல்லை. ஆண்களின் வாழ்க்கையில் அற்புதம் செய்யும் உணவுகளில் விளாம்பழமும் ஒன்று.

ரத்தத்தின் மூலம் கலக்கின்ற நோய்க் கிருமிகள் மற்றும் நோய் அணுக்களைச் சாகடிக்கின்ற திறன் உண்டு.

எந்த நோய்க் கிருமிகளும் ரத்தத்தில் பரவாமல் தடுக்கும். அஜீரணக் கோளாறுகளை சரிசெய்து, பசியைத் துண்டவும் விளாம்பழம் உதவுகிறது.

நரம்புத் தளர்ச்சி பிரச்சினைகள் இருப்பவர்களுக்கு விளாம்பழம் மிகச் சிறந்த தீர்வாக அமையும்.

அதேபோல், உடலில் ஏற்படும் கால்சியம் குறைபாடு, தலைமுடியில் உண்டாகும் அதிகப்படியான வறட்சி, சருமத்தில் உண்டாகும் அதிகப்படியான வறட்சி ஆகியவற்றுக்கும் மிகச்சிறந்த மருந்தாக விளாம்பழம் இருக்கும்.

பாம்புக் கடியின் வீரியத்தைக் கூட குறைக்கும் பேராற்றல் இந்த விளாம்பழத்துக்கு உண்டு.

விளாம்பத்தின் ஓட்டினைப் பொடி செய்து, அதில் உணவிலோ அல்லது பாலிலோ கலந்து குடித்தால் ஆண்களுக்கு விந்தணுக்கள் நீர்த்துப் போகும்.




இலகுவாக எங்களுடைய பிரதேசங்களில் கிடைக்கக்கூடிய விழா பழத்திற்கு இத்தனை மகிமைகள் இருக்கிறதா? இலகுவாக கிடைக்கக் கூடியவற்றின் மதிப்பு எமக்கு எப்போதும் அவ்வளவாக தெரிவதில்லை இனிமேல் விளாம்பழத்தை யாராவது அசட்டை பண்ணுவீர்களா?

# வட மாகாணத்தின் வறட்சிப்போக்கு

**பொதுவாகப் பொருளாதாரத்தைக் காலவரிசை நோக்கில் மரபுநிலைப் பொருளாதாரம், தொழில் யுகப் பொருளாதாரம், தற்போதைய நவீனகாலப் பொருளாதாரம் எனப் பிரித்து அறியலாம். இக்காலத்தில் மனித அறிவே பொருளாதாரமாக அமையும் நிலை உருவாகியுள்ளது. அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளுக்குப் பல நாடுகளிலிருந்தும் குடியேறிய ஆய்வறிஞர்களால் அந்நாட்டின் பொருளாதார உயர்வு ஏற்றம் பெற்று வருகின்றது. இதன் வழியே வளரும் நாடுகளின் அறிவைத் தம் குடியேற்ற உத்திகளின் மூலம் பெறும் உத்தியை வளர்ந்த நாடுகள் மருத்துவம், ஆய்வு, பொறியியல் துறைகளில் கையாள்கின்றன.**

ச.அபிசரண்
மூன்றாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



முன்னைய தொடர்ச்சி

வடக்கு மாகாணத்தினுடைய வறட்சிக்கான மற்றும் ஒரு பிரதானமான காரணியாக வடக்கு மாகாணத்தினுடைய மனித நடவடிக்கைகளை குறிப்பிட்டுக் கூறலாம். அந்த அடிப்படையில் பின்வரும் மனித நடவடிக்கைகள் வடக்கு மாகாணத்தின் வறட்சி அனர்த்த நிகழ்வுகளுக்கு அடிப்படையாக அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக தாவரப் போர்வைகளை மிக அதிக அளவு அகற்றுவதன் காரணமாக வடக்கு மாகாணத்தின் பல பகுதிகள் வறட்சிக்கான நிலமையை அனுபவிப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. குறிப்பாக பல்வேறு தேவைகளின் பொருட்டு காடுகள் மற்றும் தாவர விதானங்கள் அல்லது தாவரங்கள் அகற்றப்படுவதன் காரணமாக அந்தத் தாவரங்கள் மூலம் வளிமண்டலத்துக்கு வழங்கப்படுகின்ற ஈரப்பதன் அளவு குறைக்கப்படுவதுடன் தொடர்ச்சியாக மழையற்றுப் போய் அதிகரித்த வெப்பநிலை நிலவுகின்றது. அதன் காரணமாக அந்தப் பிரதேசம் அதிக அளவிலான நீர்ப் பற்றாக்குறையை அல்லது மிக வெப்பமான வானிலையை அனுபவிப்பதோடு அது தொடர்ச்சியாக வறட்சி நிலமைக்கும் இட்டுச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையினுடைய வடக்கு மாகாணத்தில் அதிகரித்த அளவிலான வறட்சி நிலமையை உருவாக்குவதில் மனிதனுடைய கட்டுமானம் சார்ந்த செயற்பாடுகளும் அதிக அளவுக்கு பங்களிப்புச் செய்கின்றன. 2009 ஆம் ஆண்டிற்கு பின்னரும் சமாதானம் நிலவிய காலப் பகுதியிலும் வடக்கு மாகாணத்தில் பல்வேறு தரப்பினராலும் பல்வேறு வகையான கட்டமைப்புச் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகள்



மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக பெருந்தெருக்கள் நிர்மாணம், கட்டிடங்கள் நிர்மாணம் மற்றும் பல கட்டமைப்புச் சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகளின் காரணமாக அதிகளவான நீர் நுகர்வு தூண்டப்பட்டு வடக்கு மாகாணத்தில் வறட்சி நிலவக் காரணமாகின. குறிப்பாக இந்தக் கட்டுமானத் தேவைகளுக்காக, வடக்கு மாகாணத்தின் கோடை காலம் என்று அழைக்கப்படுகின்ற மார்ச் தொடக்கம் செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் நுகரப்படுகின்ற அதிகரித்த அளவிலான நீரின் காரணமாக, வடக்கு மாகாணத்தின் பல பகுதிகள் நீர்ப் பற்றாக்குறையை அல்லது வறட்சியை அனுபவிக்கின்றன. குறிப்பாக பெருந்தெருக்கள் மற்றும் பாலங்கள் போன்றவற்றின் நிர்மாணத்திற்காக அதிகளவிலான நீர் உள்ளெடுக்கப்படுகின்றது. இதன் காரணமாக இந்த அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக பல்வேறு தரப்பினராலும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற அதிகரித்த அளவிலான நீர் நுகர்வின் காரணமாக வடக்கு மாகாணத்தினுடைய தரைக்கீழ் மற்றும் தரை மேற்பரப்பு நீர்நிலைகள் நீர்மட்டங்களை இழப்பதோடு அதன் காரணமாக அந்தப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக வறட்சி நிலைமைகளும் தூண்டப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தில் வறட்சியைத் தூண்டுகின்ற மற்றொரு மானிடக் காரணியாக மனிதர்களின் வாழ்க்கை முறைகளில் ஏற்பட்ட மாற்றத்தினைக் குறிப்பிடலாம். 2009 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர், பல்வேறு வகைப்பட்ட கட்டுமானச் செயற்பாடுகள் வடக்கு மாகாணத்தில் பல்வேறு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. அந்த அடிப்படையில் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய தனிப்பட்ட அபிவிருத்திகளிலும் கணிசமான அளவு கவனம் செலுத்துபவர்களாக காணப்படுகின்றார்கள். பலரும் தங்களுடைய வீடுகளை நிரந்தரமான வீடுகளாக அமைப்பதற்காக மாடி வீடுகள் அமைக்கின்ற பொழுது, தங்களுடைய வீடு அமைந்திருக்கின்ற வளவின் நிலப்பகுதியை அழகுக்காகவும் தங்களுடைய சௌகரியத்திற்காகவும் கொழுவுகல் மற்றும் சீமெந்து கொண்டு மூடி விடுவதை நவநாகரீகமாகக் கருதுகின்றார்கள். இவ்வாறு நிலப்பகுதி நீர் உட்புகாதவாறு நிரப்புச் செய்யப்படுவதன் காணமாக நீர் உட்புகும் தன்மை தடுக்கப்பட்டு அல்லது குறைக்கப்பட்டு இயல்பாகவே வடக்கு மாகாணத்தின் தரைக்கீழ் நீர் வளத்துக்குச் சேர வேண்டிய நீரின் அளவு கணிசமான அளவு குறைக்கப்படுகின்றது. இதன் காரணமாக உரிய காலத்தில் மழைவீழ்ச்சி கிடைத்தாலும் கூட, போதுமான அளவு தரைக்கீழ் நீர் வளம் சேராமல் இருப்பதன் காரணமாக, நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு, வடக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களிலும் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.





வடக்கு மாகாணம் ஆண்டு தோறும் தென்மேற்குப் பருவக் காற்றுக் காலத்தில், குறிப்பாக ஜூலை, ஒகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் மிகப்பெரிய அளவில் வறட்சி நிலைமையை அல்லது நீர்ப் பற்றாக்குறை நிலைமையை எதிர்கொண்டு வருகின்றது. மிக நீண்ட நாட்களாக மழையற்ற தன்மையும், அதிகரித்த வெப்பநிலையும், அதிக அளவிலான ஆவியாக்க ஆவியுயிர்ப்புச் செயற்பாடுகளும், முறையற்ற நீர்ப் பயன்பாடும், முறையற்ற நீர் முகாமைத்துவச் செயற்பாடுகளும் வடக்கு மாகாணத்தில் வறட்சி நிலைமைகளைத் தூண்டுகின்றன. அந்த அடிப்படையில் வடக்கு மாகாணத்தின் வறட்சி என்பது மிதமான வறட்சியாகவும் பெரும்பாலும் வளிமண்டல வறட்சியாகவுமே காணப்படுகின்றது. ஆனாலும் சில சந்தர்ப்பங்களில் வடக்கு மாகாணத்தினுடைய வறட்சியானது வளிமண்டல வறட்சியிலிருந்து நீரியல் வறட்சியாகவும், சில சந்தர்ப்பங்களில் விவசாய வறட்சியாகவும் உருமாறுகின்றது. எவ்வாறாயினும் மக்கள் இடம்பெயர்கின்ற அளவிற்கு மிக மோசமான வறட்சி நிலைமைகள் கடந்த மூன்று தசாப்தங்களாக வடக்கு மாகாணத்தில் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வடக்கு மாகாணத்தில் தென்மேற்குப் பருவக்காற்றுச் செயற்பாடுகள் உயர்வாக அல்லது உச்சமாக உள்ள காலப் பகுதிகளான ஜூலை, ஒகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களிலேயே அதிக அளவிலான வறட்சி நிலைமைகளை அல்லது நீர்ப் பற்றாக்குறை நிலைமைகளை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக வடக்கு மாகாணத்தினுடைய சில பகுதிகள்

ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக வறட்சி நிலமைகளை அல்லது நீர்ப் பற்றாக்குறை நிலமைகளை எதிர்கொள்கின்ற சூழ்நிலையை அவதானிக்க முடிகின்றது.

இந்த வறட்சியின் காரணமாக மக்கள் நீரின்றி இருக்கின்ற அதேவேளை, பல பிரதேசங்களில் மக்கள் குடிநீரை அல்லது வீட்டுத் தேவைகளுக்கான நீரைப் பெறுவதற்காக நீண்ட தூரம் பயணம் செய்து பெறவேண்டிய சூழ்நிலையும் காணப்படுகின்றது. எனினும் அண்மித்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வடக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினுடைய ஏற்பாட்டில், தென்மேற்கு பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலப்பகுதிகளில் நீர் வழங்கல் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதன் காரணமாக, நீர்ப் பற்றாக்குறை என்பது ஒப்பீட்டு ரீதியாக குறைவான பாதிப்பை ஏற்படுத்துகின்ற நிலைமையே காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்தின் சில பிரதேச செயலாளர் பிரிவுகள், குறிப்பாக வடக்கு மாகாணத்தின் முசலி, நானாட்டான், மாந்தை மேற்கு, துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், செட்டிகுளம், வவுனியா வடக்கு, கரைச்சியின் மேற்குப்பகுதி, கண்டாவளையின் வடக்குப் பகுதிகள், வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, காரைநகர், வலிகாமம் கிழக்கின் சில பகுதிகள், மற்றும் வலிகாமம் மேற்கின் சில பகுதிகள் ஆண்டுதோறும் வறட்சியினால் கடுமையாகப் பாதிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது வடக்கு மாகாணத்தில் வறட்சியின் போது, அதிக அளவு ஆவியாதல் காரணமாக பெரும்பாலான குளங்கள், குட்டைகள் மற்றும் கிணறுகள் அவற்றின் நீரை இழக்கின்றன. குறிப்பாக குடிநீருக்காக மக்கள் தொலைதூர இடங்களுக்குச் செல்கின்ற நிலைமையை அவதானிக்கலாம். மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மக்கள் குடிநீரைப் பெறுவதற்கு 03 அல்லது 04 கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது. வடக்கு பிராந்தியத்தில் ஆண்டுதோறும்175,000 இற்கும்அதிகமான மக்கள் நேரடியாக வறட்சி காரணமாகப் பாதிக்கப்படுகின்றனர். தென்மேற்குப் பருவக்காற்றுக் காலத்தில் மூன்றாம்பிட்டி, தேவன்பிட்டி, இலுப்பைக்கடவை, நாச்சிக்குடா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள், தங்கள் வீட்டு உபயோகத்திற்குத் தேவையான தண்ணீரைப் பெற ஒரு நாளைக்கு மூன்று மணி நேரத்திற்கும் மேலாகச் செலவழிக்கின்றனர்.

வடக்கின் பல்வேறு பிரதேசங்களில் வரையறுக்கப்பட்ட குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவதன் காரணமாகவும் தென்மேற்குப் பருவக் காற்று நிலவும் ஓகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதக் காலப் பகுதியில் நிலவுகின்ற அதிக



அளவிலான நீரின் தேவையும் பல்வேறு வகைப்பட்ட பாதிப்புகளை ஏற்படுத்துவது அவதானிக்கப்பட்டிருக்கின்றது. சில பகுதிகளில் விவசாயச் செயற்பாடுகளை இடைநடுவில்கைவிட வேண்டிய அளவிற்கு தரைக்கீழ் நீர் மட்டம் குறைவடைந்து, தரை மேல் நீரும் இல்லாத சூழ்நிலையில், மக்கள் குடிநீருக்காக பல்வேறு வகைப்பட்ட துன்பங்களை எதிர்கொள்ளுகின்றனர். எனினும் இலங்கையினுடைய ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுகின்ற பொழுது ஒப்பீட்டு ரீதியாக வறட்சியினால் மிகக் குறைவான பாதிப்பே வடக்கு மாகாணத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் எதிர்காலத்திலும் இத்தகைய நிலைமையே இருக்கும் என்பதை உறுதிப்படுத்த முடியாது.


# தமிழர் பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

## கட்டணவிபரம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

# யாழ்ப்பாணத்தின் அடையாளமாக..

தொடர்ச்சி....

இதற்கு இங்கு எம்முடன் பணியாற்றும் ஊழியர்கள்தான் காரணம் கடின உழைப்பின் மூலமாக இதனை அவர்கள் சாதித்திருக்கின்றார்கள். இந்த மண்ணில் பெருமளவுக்கு கொள் என்ற தானியத்தை ஒவ்வொரு வருடமும் விளைவித்துப் பின்னர், அதனை மண்ணுடன் கலந்து இந்த மண்ணின் தன்மையை மாற்றியுள்ளார்கள்.

இதன்மூலமாக மிளகாய், மரவள்ளி, பயற்றங்காய் என்பவற்றையும் தாண்டி பெருமளவுக்கு கொய்யாவும் நட்டுள்ளோம். அதனைவிட பெருமளவு மாதுளங் கன்றுகளையும் நாட்டியுள்ளோம். இங்கு மாதுளம் பழத்துக்கு நல்ல கேள்வி இருக்கின்றது. இன்னும் இலங்கைக்குத் தேவையான மாதுளம் பழங்களை நாம் வெளிநாடுகளில் இருந்துதான் இறக்குமதி செய்கின்றோம். ஆனால், அண்மைக் காலத்தில் மாதுளச் செய்கை இலங்கையில் முன்னேற்றம் கண்டு வருகின்றது. அந்த வகையில், வடமாகாணத்தில் ஆகக்கூடிய மாதுளங் கன்றுகளை வைத்து பராமரிக்கிறோம்.

அதேபோல குறுகிய காலத்தில் பலனளிக்கக்கூடிய ரொம் ஜேஸி மாமரக் கன்றுகளை சுமார் 1500 க்கும் அதிகமாக வைத்திருக்கின்றோம். அதிலிருந்து ஏற்கனவ பலன்களைப் பெற ஆரம்பித்துள்ளோம். அவற்றின் வளர்ச்சி அபாரமாக இருக்கின்றது. அதனைவிட, சுமார் ஐயாயிரம் குடை மிளகாய் இங்கு நாட்டியுள்ளோம். அதற்கான சந்தை வாய்ப்பு அதிகமாக இருக்கின்றது. அந்த மிளகாயை ஏற்றுமதி செய்யக்கூடியளவுக்கு சந்தைவாய்ப்பு இருக்கின்றது. நாங்கள் ஐயாயிரத்திலிருந்து இப்போது ஐம்பதினாயிரம் கன்றுகளை நடுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகை மிளகாய் கன்றுகளை வளர்க்க விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டால், நாம் அவர்களுக்கு உதவத் தயாராக இருக்கின்றோம்.

இதனைவிட கருவாவும் செய்கிறோம். வடபகுதியில் கருவா செய்வது சாத்தியமில்லை என்ற கருத்து முன்னர் இருந்தது. காரணம் இங்குள்ள வெப்பம். ஆனால், நாம் கருவாவை மிகவும் கஷ்டப்பட்டு செய்துகொண்டு வருகிறோம். கருவா கூட்டுத்தாபனமும் இவ்விடயத்தில் எமக்கு உதவியிருக்கின்றது. விரைவில் இதன் பயன்களை மக்கள் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.






கேள்வி - இதனைவிட வேறு எவ்வாறான உற்பத்திகளை முன்னெடுக்கின்றீர்கள்?

பதில் - இங்கு விளையும் உணவுப் பொருட்கள் பெருமளவுக்கு இங்கு வருபவர்களுக்கு உணவளிப்பதற்கும், இங்கு பணியாற்றும் 400 ஊழியர்களுக்கு உணவளிப்பதற்கும் தேவையானதாக இருக்கின்றது. இதற்கு மேலதிகமாக வருவதைத்தான் நாங்கள் சந்தைப்படுத்துகின்றோம். இவை இயற்கை முறையில் செய்யப்படும் உணவுகள்.

“ இப்போது இயற்கை முறையிலான சவர்காரம் செய்யத் தொடங்கியுள்ளோம். கைகழுவுவது. நிலத்தை சுத்தப்படுத்துவது போன்ற திரவ சவர்காரத்தை இயற்கை முறையில் செய்வதில் வெற்றிபெற்றுள்ளோம். அதனைத்தான் றீச்சா பண்ணை முழுவதிலும் பயன்படுத்துகிறோம். இதனைவிட சோப்பும் தயாரித்துள்ளோம். இவை விரைவில் சந்தைப்படுத்தப்படும்.” என்கிறார் றீச்சா குழுமத்தின் தலைவரான கந்தையா பாஸ்கரன்.

கந்தையா பாஸ்கரன் சர்வதேச ஜபீசி குழுமத்தின் தலைவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.



# மலைநாட்டு விவசாயிகளும் மரக்கறி பொருளாதாரமும்

**வருடத்தில் எல்லா காலங்களிலும் மரக்கறிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. இதன் காரணமாக பல விவசாயிகள் பெறும் நஷ்டத்தை எதிர்கொள்கின்றனர். மரக்கறி உற்பத்திகள் அதிக அளவில் நல்ல விளைச்சலை தரக்கூடிய காலங்களில் அவற்றுக்கான விலை சந்தையில் குறைவாகவே காணப்படுகின்றது**

பெரியசாமி சுசாந்தினி
யாழ் பல்கலைக்கழகம்
ஊடகக்கற்கைகள் துறை

இலங்கை தீவானது கரையோர சமவெளி, அண்சமவெளி, மத்திய மலை நாடு என வேறுப்பட்ட மூன்று தரைத்தோற்ற அம்சங்களை கொண்டதாக உருவாக்கம் பெற்றுள்ளது. இலங்கையின் நடுப்பகுதியில் சார்பாக அமைந்துள்ள சப்ரகமுவ குன்றுகளை தவிர்த்து 300 மீட்டருக்கும் மேல் அமைந்துள்ள பகுதியே மலையக பிரதேசமாகும்.

இப்பிரதேசத்தினுள் மாத்தளை, கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை போன்ற மாவட்டங்களை உள்ளக்கி காணப்படுகிறது.

மலையகப் பிரதேசங்களில் அதிகப்ப டியாக தேயிலை பிரதான பயிர்செய்கையாக மேற்கொள்ளப்படுகின்றது. அத்தோடு தெங்கு, இறப்பர் போன்ற பெருந்தோட்ட பயிர்களுக்கும் மிளகு, கருவா போன்ற வாசனைப் பொருட்களுக்கும் மரக்கறி வகைகளின் உற்பத்திக்கும் பிரபல்யமான இடமாக மலைநாட்டு பிரதேசம் விளங்குகின்றது. அந்தவகையில் மலைநாட்டு பிரதேசத்தில் மரக்கறி விவசாயமும் அவர்களது வாழ்வியலும் எவ்வாறு அமைகின்றது என நோக்கும் போது.....

மலையகத்தில்பிரதானமாக நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் அதிகளவில் மரக்கறிச்செய்கை உற்பத்தி செய்யப்படுகின்றது. இப்பிரதேசங்களில் தரைத்தோற்றமானது சமாந்தரமாக அல்லாமல் குத்துச் சாய்வாக அமையப்பெற்றுள்ளமையால் இப்பகுதிகளில் படிக்கட்டு முறையிலான பயிர்ச்செய்கை முறையே மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வகையிலான பயிர்ச்செய்கை முறைகள் காண்பவர்களை வியப்பிலும் சிந்திப்பிலும் ஆழ்த்துவதான ஒரு நிலையை ஏற்படுத்துகின்றது.

இப்பிரதேசங்களில் கரட், லீக்ஸ், கோவா, தக்காளி, போன்ஜி, கருமிளகாய், உருளைக்கிழங்கு போன்ற மரக்கறிகள் பிரதானமாக பயிரிடப்படுகின்றன.

மலையகத்தில் மரக்கறி விவசாயம் செய்யும் விவசாயிகள் மரக்கறி உற்பத்தியை சிறப்பாக கொண்டு செல்வதில் பாரிய சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். காலநிலை மாற்றம், விவசாய இயந்தி ரங்களின் விலையேற்றம், விதைகள், மருந்துகள், இரசாயன உரம் என்பவற்றின் விலையேற்றம், மரக்கறிகளின் விலைத்தளம்பல் , விவசாய நிலங்களின் குத்தகை பெறுமதி அதிகரிப்பு, இயற்கை அனர்த்தங்கள் போன்ற பல சவால்களை எதிர்நோக்கியே விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

மலையகத்தில் வருடத்தில் எல்லா மாதங்களிலும் ஒரே மாதிரியான மிதமான காலநிலை செல்வாக்கு செலுத்துவதில்லை. மரக்கறி பயிர்ச்செய்கையை சிறப்பாக மேற்கொள்ள வேண்டுமெனில் மிதமான காலநிலை இன்றியமையாத அம்சமாகக் காணப்படுகின்றது. தற்காலத்தில் பருவநிலை மாற்றம் வருடத்திற்கு வருடம் மாற்றம் கொண்டவையாகவே விளங்குகின்றது. இதனால் பருவநிலை மாற்றத்திற்கேற்ப மரக்கறி உற்பத்தியை அதிகரிப்பது சவாலான ஒரு விடயமாகவே அமைகின்றது என மலைநாட்டு விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அதிகளவிலான மழை வீழ்ச்சி இரண்டு மூன்று மாதங்களுக்கு தொடர்தேர்ச்சியாக கிடைக்கப்பெறும் போது மரக்கறி செய்கை பாதிப்படைகின்றது. குறிப்பாக மழைக்காலத்தில் தாவரங்களில் அழுகல் நோய்கள் அதிக அளவில் ஏற்பட்டு மரக்கறிகள் பாதிப்படைகின்றது. இது விவசாயிகள் எதிர்நோக்கும் பிரதான சவாலாக அமைகின்றது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் மரக்கறி பொருளாதாரம் பாதிப்படைகின்றது.

தற்காலத்தில் விவசாய இயந்திரங்களின் விலைகள் இரட்டிப்பாக அதிகரித்துள்ளது. இதனைப் போன்றே மரக்கறிகளின் விதைகள், மரக்கறிகளுக்கு பயன்படுத் தக்கூடிய மருந்துகள், இரசாயன உரம் போன்றவற்றின் விலைகளும் பல மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் ஏழை விவசாயிகளினால் விவசாயத்தை மேற்கொள்வதென்பது இக்கட்டான ஒன்றாகவே காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு இடர்பாடான நிலைக்கு பணக்கார விவசாயிகள் முகம் கொடுப்பதில்லை. கலப்பாக்கம் செய்யப்பட்ட விதைகள், இரசாயன உரம் என்பவற்றை தட்டுப்பாட்டு காலங்களில் ஏழை விவசாயிகளினால் பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை இருந்த போதிலும் பணக்கார விவசாயிகள்





அவ்வாறானதொரு சூழ்நிலைக்கு முகம் கொடுக்காமல் சுமுகமான முறையில் அவர்களின் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவே செய்தனர்.

மலையகத்தில் பெரும்பாலான மரக்கறி விவசாயிகள் குத்தகைக்கு நிலங்களினை பெற்று அதிலேயே மரக்கறி உற்பத்திகளை செய்கின்றனர். இன்றைய காலகட்டத்தில் நிலத்தினுடைய குத்தகை பெறுமதி அதிகரித்துள்ளது இதன் காரணமாக சில விவசாயிகள் விவசாய நிலங்களை பெற்றுக் கொள்ள முடியாமல் மரக்கறி விவசாயத்தை கைவிடக்கூடிய நிலைக்கு ஆளாகி பொருளாதார ரீதியில் சரிவடைகின்றனர்.

வருடத்தில் எல்லா காலங்களிலும் மரக்கறிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. இதன் காரணமாக பல விவசாயிகள் பெறும் நஷ்டத்தை எதிர்கொள்கின்றனர். மரக்கறி உற்பத்திகள் அதிக அளவில் நல்ல விளைச்சலை தரக்கூடிய காலங்களில் அவற்றுக்கான விலை சந்தையில் குறைவாகவே காணப்படுகின்றது. இது விவசாயிகளுக்கு ஒரு சவாலான விடயமாகவே அமைகின்றது. இது தொடர்பில் நுவரெலியா மாவட்டத்தில் மரக்கறி விவசாயம் மேற்கொள்ளும் விவசாயி த.சுப்ரமணியம் கருத்து தெரிவிக்கையில்.....

“தற்காலத்தை பொறுத்தவரையில் மரக்கறி செய்கையை வெற்றிகரமாக கொண்டுசெல்வதென்பது சிரமமான ஒன்றாகவே காணப்படுகின்றது. நான் விவசாயம் செய்ய ஆரம்பித்து ஏறக்குறைய 30 வருடங்களுக்கு மேல் ஆகின்றது. அந்த காலம் தொட்டு கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் வரையிலும் நியாயமான விலையிலேயே விவசாயத்திற்கு தேவையான உரம், மருந்துகள், விதைகள் கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தன.

ஆனால்தற்காலத்தை பொருத்தவரையில் அவ்வாறானதொரு நிலைப்பாடு காணப்படுவதில்லை. ஊதாரணமாக இரண்டு வருடங்களுக்கு முன்னர் 50 கிலோகிராம் உரப்பொதியின் விலை 1500 ஆக காணப்பட்டது. அதேநேரம் தற்போது அதே நிறையுடைய உரப்பொதியொன்றின் விலை 10000 ரூபாவாக உயர்வடைந்துள்ளது. அதேபோலவே மருந்துகளின் (பூச்சுக்கொல்லி, களைக்கொல்லி, விற்றமின்) ஆகியவற்றின் விலையும் , கலப்பாக்கம் செய்யப்பட்ட விதைகளின் விலையும் பன்மடங்கு உயர்ந்து உச்சம் கண்டுள்ளது. இவைகளின் விலைகள் உயர்விற்கு ஏற்ப மரக்கறிகளின் விலைகள் உயர்வடைவதில்லை. இவ்வாறானதொரு நிலையில் நாங்கள் விவசாயத்தை மேற்கொள்ளும் போது ஆரம்பத்தில் வழங்கும் முதலீடு பல சமயங்களில் கிடைக்கும் வருமானத்தை விட அதிகமாகவே காணப்படுகின்ற சூழ்நிலையில் எங்களுடைய விவசாயத் தொழில் நஷ்டத்தையே சந்திக்க நேரிடுகின்றது” என அவர் தன்னுடைய அனுபவத்தினூடாக கருத்தினை தெரிவித்தார்.



அதேநேரம்.. பதுளையைச் சேர்ந்த அருள்ராஜ் எனும் விவசாயியிடம் இது தொடர்பில் வினவிய போது..

“விவசாயம் செய்வது மிகவும் கடினமா ஒரு தொழிலாகவே காணப்படுகின்றது. எம்முடைய முழுமையான பலத்தை கொடுக்க வேண்டும். இத்தொழிலை பொருத்தமட்டில் ஓய்வு என்ற வார்த்தைக்கே இடமில்லை என்றுதான் கூறவேண்டும். அதேபோல் கொரோனா பெருந்தொற்று காலங்களில் மிகவும் கடினமான ஒரு சூழலை எதிர்கொண்டோம். கடன் பெற்று மரக்கறி தோட்டங்களை அமைத்து அவற்றை உரம், மருந்துகள் இல்லாமல் முறையாக பராமரிக்க முடியாத சூழலுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. அந்த கடன்களைக் கூட இன்று வரையிலும் அடைத்துக்கொண்டுதான் இருக்கிறோம்” என கருத்து காணப்பட்டது.

அதேபோல் அதிக அளவிலான மழைக்காலங்களில் விவசாய நிலங்கள் அனர்த்தங்களுக்கு உள்ளாகின்றது. குறிப்பாக விவசாய நிலங்களில் நீர் தேங்கி நிற்றல், மண்சரிவு ஏற்படல் போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இதனூடாகவும் மரக்கறி பொருளாதாரம் பாதிப்படைகின்றது.

மலையகத்தை பொருத்தவரையில் ஆரம்பத்தில் மரக்கறி விவசாயத்தில் ஈடுபட்ட பெரும்பாலான விவசாயிகள் தற்போது விவசாய உற்பத்தியில் ஈடுபடுவது கனிசமாக குறைவடைந்துள்ளது. இதற்கான காரணம் மேற்கூறப்பட்ட சவால்களாகவே இருக்கின்றது. மலையகத்தினுடைய மரக்கறி பொருளாதாரத்தை மட்டுமே நம்பி வாழும்ஏழை விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விதைகளும் மருந்துகளும் உரமும் கிடைக்கப்பெருமிடத்திலும் விவசாயிகளுக்கு மானிய முறையிலான சலுகைகள் கிடைப்பதற்கு அரசாங்கம் கொள்கைகளை வகுக்கும்போதும் மரக்கறிச் செய்கையில் பொருளாதார ரீதியிளான உச்சத்தை அடையலாம்.....

# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

### உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

0777 43 55 57


இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.10.2024இல் வெளியிடப்பெற்றது.